விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 31 செவ்வாய்க்கிழமை (16.09.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 271

# ஐ.நா முன்றலில் உரிமை முழக்கம்




## நீதி கேட்டு

(ஜெனிவா)

தமிழர் தாயகத்தில் இலங்கை அரசாங்கத்தினால் நடத்தப்பட்ட தமிழ் இன அழிப்பிற்கு நீதி கேட்டு ஐ.நா. முன்றலில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் உலகின் பல பாகங்களிலும் இருந்து வந்து கலந்து கொண்டு உரிமை முழக்கமிட்டனர். ஈகப் பேரொளி முருகதாசன் திடலில் நேற்று திங்கட்கிழமை இவ்வுரிமை முழக்கம் எழுச்சியுடன் இடம்பெற்றது.

20ஆம் பக்கம் பார்க்க....

## முதலமைச்சர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று மாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். காலில் ஏற்பட்ட சிறுகாயத்தினால் நடக்க முடி

20ஆம் பக்கம் பார்க்க....

## பட்ஜெட் நவம்பரில்

(கொழும்பு)

2015ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்துக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதனைத் தொடர்ந்து 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதி நிதியமைச்சரும், ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

நிதி அமைச்சர் என்ற ரீதியில் அவர் தொடர்ந்து பத்தாவது தடவையாக சமர்ப்பிக்கும் வரவு செலவுத் திட்டம் இதுவாகும்.

மனித வளங்களை அடிப்படை

20ஆம் பக்கம் பார்க்க....

## கொழும்பிலிருந்து வந்தவர்களால் கீரிமலையில் காணி அளப்பு

(யாழ்ப்பாணம்)

கீரிமலையில் மக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி 148 ஏக்கர் நிலத்தை கொழும்பில் இருந்து வந்த நில அளவை திணைக்கள அதிகாரிகள் நேற்றுத் திங்கட்கிழமை அளவீடு செய்ய ஆரம்பித்துள்ளனர்.

படையினரின் தேவைக்காக பெறப்படவுள்ள இந்த காணிகள் பொதுமக்களுக்கு சொந்தமானவை என்றும் காணி உறுதிப்பத்திரங்கள இருப்பதாகவும் வலி வடக்கு மீள் குடியேற்றக் குழுவின் தலைவர் எஸ்.சஜீவன் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இந்த காணிகளை நான்கு முறை அளவீடு செய்ய அதிகாரிகள் முயற்சித்தனர் என்றும் மக்களின் கடும் எதிர்ப்பினால் கைவிட்டுச் சென்றதாகவும் கூறிய அவர் நேற்று பொலிஸாரின் பாதுகாப்புடன் காணிகளை அதிகாரிகள் அளவிட்டதாகவும் கூறினார்.

அனைத்து மக்களையும் ஒன்று திரட்டி எதிர்ப்பை வெளியிடவுள்ளதாகவும் மக்களை ஒன்று சேருமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். (எ-11)

## ஜனாதிபதி மகிந்த அமெ. செல்வார்

(நியூயோர்க்)

நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ள 69-வது பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 22-ம் திகதி

20ஆம் பக்கம் பார்க்க....

## நேபாள அமைச்சர் இலங்கை விஜயம்


(கொழும்பு)

நேபாள வெளியுறவு அமைச்சர் மஹேந்திர பகதூர் பாண்டே இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 22

20ஆம் பக்கம் பார்க்க....

## தவறி விழுந்த நடத்துநர் பஸ் சில்லு ஏறி உயிரிழப்பு



(குருமன்காடு)

பஸ் நடத்துநர் பஸ்ஸிலிருந்து தவறி விழுந்ததில் சில்லு ஏறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 11.45 மணியளவில் முறிகண்டி ஏ-9 வீதியில் இடம்பெற்றுள்ளது.

வவுனியாவிலிருந்து யாழ்.நோக்கி வந்து கொண்டிருந்த பஸ் முறி

20ஆம் பக்கம் பார்க்க....




## விடுதலைப்புலிகளால் அச்சுறுத்தல் நீதிமன்றிடம் தெரிவித்தார் ஜெயா

### தமிழக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம்

(சென்னை)

விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் என்று கூறிய தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கு தமிழக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் இருப்பதால், சொத்துக்குவிப்பு வழக்கில் நீதிமன்றத்தை மாற்றக் கோரி பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் முதல்வர் ஜெயலலிதா புதிய மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார் என்ற செய்தி உலகத் தமிழர்களுக்கு மிகுந்த வேதனை அளிக்கக் கூடியதாக உள்ளது.

2009 இல் ஈழத்தில் நடைபெற்ற மிக மோசமான போரில் இந்த நூற்றாண்டு காணாத அளவில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டனர்.

போரின் இறுதி நாட்களில் விடுதலைப் புலிகள் தங்கள் ஆயுதங்களை மௌனிக்கப் போவதாக அறிவித்தனர். அவர்கள் அறிவித்தவாறே இன்று வரை சிங்களவர்களுடன் ஆயுதப் போரில் விடுதலைப் புலிகள் ஈடுபட வில்லை.

சிங்கள அரசால் இன்றுவரை தமிழர்கள் சொல்லவொண்ணா கொடுமைகளை அனுபவித்து வருகின்றனர். இருப்பினும் தமிழர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும், இனப் படுகொலையாளர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில்தான் உலகத் தமிழர்களும் போராடி வருகின்றனர்.

2009 இற்கு பிறகு விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்தி எந்த ஒரு விதமான தாக்குதலிலும் ஈடுபட

20ஆம் பக்கம் பார்க்க....

## தோல்விகளை நோக்கி ஐக்கிய தேசியக் கட்சி

### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியை நோக்கி நகர்வதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஊவா மாகாணசபைத் தேர்தலில ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியைத் தழுவும் என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினர்கள் தலைவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கும், கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர சஜித் பிரேமதாசவிற்கும் இடையில் நட்புறவை ஏற்படுத்தும் முயற்சிகளில் திஸ்ஸ அத்தநாயக்க ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாணசபைத் தேர்தலில போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ஒருவர் இறுதி நேரத்தில் தேர்தலில் இருந்து வாபஸ் பெறறுக்கொள்ள தீர்மானித்துள்ளதாக உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கஞ்சா வைத்திருந்த ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். கந்தர்மடம் பகுதியில் கஞ்சா நுகர்ந்து கொண்டிருந்த 33 வயதுடைய சந்தேக நபர் ஒருவரை நேற்று கைது செய்துள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், சந்தேகநபரிடமிருந்து 3 கிராம் கஞ்சாவையும் மீட்டதாக பொலிஸார் கூறினர்.

இதேவேளை, யாழ். நகர பகுதியில் பொது இடத்திலிருந்து மதுபானம் அருந்திக் கொண்டிருந்த இரு சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (எ-11)

## தாக்குதல் சம்பவங்களில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழில் இருவேறு இடங்களில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற தாக்குதல் மற்றும் வாள்வெட்டு சம்பவங்களில் இருவர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மல்லாகம் வங்களாவடிப் பகுதியில் உடைந்த போத்தல்களால் தாக்குதலுக்குள்ளாகி, தலை மற்றும் கைகளில் படுகாயமடைந்த நிலையில் பாஸ்கரன் இளங்குமரன் (வயது 19) என்பவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஏழாலை பகுதியில் இனந்தெரியாத நபர்களின் வாள்வெட்டிற்கு இலக்காகி உடுவில் வீரபத்திரர் கோவிலடியை சேர்ந்த நாகராசா கஜன் (வயது 25) என்பவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவங்கள் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-11)

## பாடசாலையில் கணனி திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்சுவேலி பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயத்தின் கணனி அறையில் இருந்த ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான கணனிகளின் பாகங்கள் நேற்றுமுன்தினம் இரவு திருடப்பட்டுள்ளதாக, வித்தியாலய அதிபர் நேற்று திங்கட்கிழமை முறைப்பாடு பதிவு செய்துள்ளார் என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

கணனி அறையின் ஓடுகளை பிரித்து உள் நுழைந்தே இந்த திருட்டு நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

அதிபர் நேற்று காலையில் பாடசாலைக்கு சென்று பார்த்த வேளையிலேயே பாடசாலையில் திருட்டுப்போன விடயம் தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் கூறினார்கள். (எ-11)

## சிறுமி மீட்பு; இளைஞன் கைது

காணாமல் போயிருந்த வல்வெட்டித்துறை, கொற்றாவத்தையைச் சேர்ந்த 14 வயது சிறுமியை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வளாகத்தில் வைத்து நேற்றுக் காலை மீட்டதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், சிறுமியை 2 நாட்களாக கடத்தி வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் அதேயிடத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினார்கள்.

வீட்டிலிருந்த மேற்படி சிறுமி, கடந்த சனிக்கிழமை முதல் காணாமல் போயிருந்ததாக சிறுமியின் பெற்றோர் நேற்றுமுன்தினம் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணை கள் மேற்கொள்ளப்பட்ட நிலையிலேயே அச்சிறுமி மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் கூறினர்.

சிறுமி தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இளைஞன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)

## அலங்கார உற்சவம்

(அல்லைப்பிட்டி)

அல்லைப்பிட்டி அருள்மிகு கறண்டப்பாய் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 7-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறுகின்றது. தினமும் காலை 10.00 மணி அளவில் ஸ்நபனாபிசேகம் ஆரம்பமாகி தொடர்ந்து விசேட பூசை, வீதியுலா நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னதானம் இடம்பெறும். 10-ம் நாள் இரவு விஷேட உற்சவமும், 11-ம் நாள் வைரவர் மடையுடன் நிறைவுபெறும். (எ-11)

## மன்னாரில் சடலம் மீட்பு

(மன்னார்)

மன்னாரில் அடையாளம் தெரியாத ஆணொருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார், சவுத்பார் கடற்கரையில் நேறறு திங்கட்கிழமை இந்தச் சடலம் கரை ஒதுங்கியுள்ளது.

சவுத்பார் கடற்படை முகாமிலிருந்து வங்காலை பகுதியை நோக்கிய சுமார் 3 கிலோ மீற்றர் தொலைவில் குறித்த சடலம் கரை ஒதுங்கியுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த சடலம் உருக்குலைந்து ஆடைகள் அற்ற நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரேத பரிசோதனை அதிகாரி ரி.பி.சிந்தாத்துரை, சடலத்தை நேரில் சென்று பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை மன்னார் பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கும் படியும் அடையாளம் காணும் வரை இரு வாரங்கள் வைத்தியசாலையில் வைக்கும் படியும் உத்தரவிட்டார்.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)

## ஊவாவில் ஹிருணிகாவுக்கு 14 பாதுகாவலர்கள்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு 6 மெய்ப்பாதுகாவலர்கள் இருப்பதுடன் 8 அமைச்சரவை பாதுகாப்பு பிரிவினரின் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது.

ஊவா மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்திற்கு சென்றிருந்த ஹிருணிகா தனது பாதுகாவலர்களுடன் எடுத்துக் கொண்ட புகைப்படம் இணையத்தில் வெளியாகியுள்ளது.

மொத்தமாக 14 பேரின் பாதுகாப்பு ஹிருணிகாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கறுப்பு சட்டை மற்றும் காற்சட்டை அணிந்திருக்கும் ஆறு பேர் மெய்ப்பாதுகாவலர்கள். கறுப்பு காற்சட்டை மாத்திரம் அணிந்திருப்பவர்கள் அமைச்சரவை பாதுகாப்பு பிரிவினர்.

ஹிருணிகாவின் தந்தையான முன்னாள் அமைச்சர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை செய்யப்பட்ட பின்னர், அமைச்சரவை பாதுகாப்பு பிரிவினர் கறுப்பு நிற காற்சட்டை அணியும் முறை அறிமுகப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-11)

## பாடசாலைக்கு வழங்கிய பாலில் புழுக்கள் கண்டுபிடிப்பு

(அம்பாறை)

அம்பாறை ம்ாவட்டத்தின் சம்மாந்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட வீரமுனை இராமகிருஸ்ண மகா வித்தியாலயத்தில் நேற்று தொடக்கம் பால் வழங்கும் திட்டம் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சம்மாந்துறை வலய கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை காலை மாணவர்களுக்கு வழங்குவதற்கென கொண்டுசெல்லப்பட்ட பால் பாவனைக்கு உதவாத வகையிலும் சிலவற்றில் புழுக்களும் காணப்பட்டதாக வலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் தெரியவருவதாவது,

பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு திட்டம் வழங்கப்பட்டுவந்த நிலையில் அவை நிறுத்தப்பட்டு அதற்கு பதிலாக பால் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் கீழ் கடந்த இரண்டு வாரமாக பால் வழங்கும் நடைமுறை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த நடைமுறை தொடர்பில் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றன.

ஒரு குறித்த பால் நிறுவனம் மூலம் வழங்கப்பட்டுவரும் இந்த பாலின் தரம் குறித்து பல்வேறு குற்றச்சாட்டுகள் வெளிவந்த வண்ணமுள்ளன.

இந்த நிலையில் நேற்று வீரமுனை இராமகிருஸ்ண மகா வித்தியாலயத்தின் மாணவர்களுக்கு வழ்ங்குவதற்கு என 16 பெட்டிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த பெட்டிகளை உடைத்தபோது பெட்டிகளில் அடுக்கப்பட்டிருந்த பால் பக்கற்றுகள் ஊதிய நிலையில் காணப்பட்டதாகவும் இதனைத்தொடர்ந்து பால் பக்கட்டினை உடைத்துபார்த்தபோது துர்நாற்றம் வீசியதாகவும் சில பக்கற்றுகளில் புழுக்கள் இருந்ததாகவும் பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.(எ-11)

## மணமேடையில் திருக்குறள் ஓத தாலி கட்டினார் மாப்பிள்ளை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, கனகபுரம் பகுதியில் மாங்கல்ய மந்திரங்கள் எதுவும் ஓதாமல், திருக்குறள் சொல்லி நடத்தப்பட்ட திருமண வைபவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியில் தொலைத் தொடர்பு நிறுவனம் ஒன்றில் கடமையாற்றும் கனகேஸ்வரன் உதயபாபு என்ற மணமகனுக்கும் ஆசிரியையான இறைபிள்ளை அபிராமி என்பவருக்குமே இந்த திருமணம் நடைபெற்றது.

இந்து முறைப்படி நடைபெற்ற இந்த திருமணத்தில் ஐயர் இல்லை. சமஸ்கிருத மொழியில் மந்திரங்கள் எதுவும் ஓதப்படவில்லை.

ஆனால், திருக்குறள்கள் சொல்லப்பட்டு, சுப முகூர்த்தத்தில் மணமகளின் கழுத்தில் மணமகன் தாலி கட்டி திருமணம் முழுமை பெற்றது.

திருமணத்தை கிளிநொச்சி தமிழ் சங்க தலைவரும் மணமகளின் தந்தையுமான வே.இறைபிள்ளை தலைமையேற்று நடத்தியதுடன், கிளிநொச்சி மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் ஆசியுரையினையும் வழங்கினார்.

இந்த திருமண நிகழ்வில், திருவள்ளுவருடைய திருவுருவப் படம் வைக்கப்பட்டு திருக்குறள் ஓதப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(எ-254)





A/L பரீட்சைகளின் பின்
கொம்ப்யூட்டர் படிப்புகளுக்கு
அதிகம் ஏன் செலவிட வேண்டும்

Mega ஸ்கொலர்ஷிப் — you can Win 75%

புலமைப்பரிசில் பரீட்சையில் பங்குபற்றுங்கள்

Sept. 21st ஞாயிறு

30 நிமிடங்களில் 25 MCQ பொதுஅறிவு வினாக்களுக்கு விடையளித்து நீங்கள் விரும்பிய கனிணி டிப்ளோமா ஒன்றை தெரிவுசெய்யுங்கள்.

இலவச அனுமதிகளுக்கும் விபரங்களுக்கும்

CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

யாழ்ப்பாணம் 2G

(சி-8508)




இரண்டாம் ஆண்டு நினைவு நாள்

### கந்தையா ஜீவகாருண்யம்

தோற்றம்:-23.10.1936 மறைவு:-08.09.2012

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினரும்
முன்னைநாள் இணைப்பாளர் பாண்டியன்குளம்
துணுக்காய் அபிவிருத்திக் கழகம் (P.T.D.O)

இரண்டு ஆண்டுகள் ஆனதப்பா
இரவுகள் மட்டும் விடிந்தது
விழிகள் மட்டும் வெளுக்கவேயில்லை
காலையில் பொழுது எமக்கு
கறுப்பாகவே விடியுதப்பா
என்னடா வாழ்க்கை என்று

எண்ணிய போதெல்லாம்
நெஞ்சில் சின்னதாய் சுகம் தந்தீர்
சிறகுகள் முளைக்க வைத்தீர்
உயிரை வலியோடு முடிக்கும் போது
உங்கள் அன்பின் கதகதப்பில்
அமிழ்த்தியே போனதேனோ


இல.02 கடை வீதி, அணிஞ்சியன்குளம்,
துணுக்காய் சாலை, மல்லாவி.

-குடும்பத்தினர்

(7606)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையிலிருந்து சரிந்தது பேருந்து; ஏழு குழந்தைகள் உட்பட 26 பேர் பலி!



தென்கிழக்கு பெருவில் உள்ள மலைப்பகுதியில் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஏழு குழந்தைகள் உட்பட 26 பேர் உயிரிழந்தனர்.

அந்நாட்டில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொள்ளும் கோவில் திருவிழாவில் பங்கேற்கும் பொருட்டு பயணிகளை ஏற்றிக் கொண்ட பேருந்து ஒன்று புக்கியோ நகரிலிருந்து சால்ஹூவான்கா நோக்கி சென்று கொண்டிருந்தது.

அப்போது அபுரிமாக் மாகாணத்தில் உள்ள ஏழு வளைவுகள் என்ற ஆபத்தான வளைவில் பேருந்து சென்று கொண்டிருந்தது.

திடீரென கட்டுப்பாட்டை இழந்த பேருந்து சாலையிலிருந்து 650 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

நேற்றுமுன்தினம் இவ்விபத்தில் 19 பேர் பலியானதாக கூறப் பட்ட நிலையில் நேற்று உடல்கள்மீட்கப்பட்ட போது பலியானோர் எண்ணிக்கை 26 ஆக அதிகரித்ததாக கோடாரூஸ் நகர காவல் அதிகாரியான உரியேல் லிக்யூ கூறினார். (இ)

CIMA
Chartered Institute of Management Accountants
@ Wisdom
☎ 021 2220727 | 021 7200777

## எபோலாவுக்கு உதவ சுவிஸ் முன்வருகை

எபோலா நோயினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு நிவாரண நிதிகளை வழங்க சுவிஸ் முன்வந்துள்ளது.

கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் எபோலாவில் தாக்கப்பட்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பரிதாபமாய் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் இறக்கும் அபாயத்தில் உள்ளனர்.

இவர்களுக்கு உதவும் வகையில் 2 மில்லியன் பிராங்குகளை நிதி உதவியாக சுவிஸ் அளிக்கின்றது.

இதில் ஒரு மில்லியன் பிராங்குகள் மருந்துகளுக்கும், மற்ற ஒரு மில்லியன் பிராங்குகள் உணவு பொருட்களுக்கும் தரப்படுவதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இதேபோல் சுவிஸ் அரசு ஏற்கனவே 1.65 மில்லியன் பிராங்குகள் அளித்து உதவி செய்தது குறிப்பிடத்தக்கது. (இ)

# முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களுக்கு அரசினது அசமந்தப் போக்கே காரணம்

தம்புள்ளை ஹைறியா ஜும்ஆ பள்ளிவாசலின் மீது நேற்றுமுன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்டுள்ள கைக்குண்டு தாக்குதல், முஸ்லிம்கள் மீதான அரசின் அக்கறையின்மையின் வெளிப்பாட்டை காட்டுவதாக மேல் மாகாண சபை ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் சமூகம் நாள்தோறும் பல துயரங்களுக்கு ஆளாக வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுவரும் செய்திகளை கேட்கும்போது மிகுந்த கவலையளிப்பதாக தெரிவித்துள்ள அவர், அளுத்கம சம்பவங்களுக்கு இதுவரையில் நீதி கிடைக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

தம்புள்ளை பள்ளிவாசல் தாக்குதல் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மூன்று வருடங்களுக்கு மேலாக இலங்கை முஸ்லிம்கள் பல துயரங்களுக்கு ஆளாகியிருக்கின்றனர்.

இதனால், மக்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கினறனர். மக்களின் இந்த நிலைமை மிகவும் கவலையளிப்பதாக வுள்ளது.

அளுத்கம, பேருவளை, தர்காநகர், வெலிப்பன்ன மற்றும் துந்துவ பகுதிகளில் இனவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை நீதி வழங்கப்படவில்லை நட்டஈடும் வழங்கப்படவில்லை. இதுதொடர்பில் ஆராய குழுவொன்று அமைக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்தபோதும், இதுவரையில் எந்த குழுவும் அமைக்கப்படவில்லை. இதன்மூலம், இவ் விவகாரத்தை அரசு மூடி மறைப்பதற்கு முயற்சிப்பது தெரிகிறது.

இதனிடையே, தம்புள்ளை பள்ளிவாசலுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் நள்ளிரவு வேளையில் பள்ளிவாசலுக்குள் இருவர் நுழைந்து குண்டுத்தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்த சம்பவத்தின் போது அங்கு பாதுகாப்பு பணியிலிருந்த பொலிஸார் என்ன செய்து கொண்டிருந்தனர் என்ற கேள்வி எழுகின்றது.

அத்தோடு, முஸ்லிம்களுக்கு எதிராக கடும போக்கு வாதிகள் மேற்கொண்ட பல தாக்குதல்களின் போது பொலிஸார் கைகட்டியே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்துள்ளனர்.

இது, இனவாதிகளுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுப்பதாகவே அமைந்திருக்கிறது. இலங்கையில் சட்டம் சீர்குலைந்துள்ளது. இந்நிலைமை தொடருமாயின் இலங்கையில் முஸ்லிம் இனம் அழிக்கப்பட்டுவிடும் அபாயம் தோன்றியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## மரண தண்டனைக் கைதிகள் தலதா மாளிகையில் வழிபாடு

மரண தண்டனை கைதிகளுக்கு பௌத்த மக்களின் புனித தளமாக கருதப்படும் கண்டி தலதா மாளிகையில் வழிபாடு செய்ய சந்தர்பபம் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது. இன்று செவ்வாய்க்கிழமை இந்த விசேட வழிபாட்டு நிகழ்வில் கைதிகள் பங்கேற்கவுள்ளனர.

சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் எண்ணக் கருவிற்கு அமைய இந்த வழிபாட்டு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கைகள் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்ட நூறு கைதிகள் கண்டி தலதா மாளிகையில் வழிபாடு செய்வார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய சிறுபான்மை சமூக மத வழிபாட்டுத் தளங்களுக்கு கைதிகள் அழைத்துச் செல்லப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சிங்கள பௌத்த மக்களின் புனித தளமான தலதா மாளிகையை மட்டும் வழிபாடு செய்ய சந்தர்ப்பம் அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளது. (இ)

## தொண்டு நிறுவனம் குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள்

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கெருடமடு, வசந்தபுரம், பேராறு ஆகிய இடங்களில் கட ந்த 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஏற்பட்ட இடியுடன் கூடிய மழையின் போது ஏற்பட்ட மினி சூறாவளியால் பாதிக்கப்பட்ட 19 குடும்பங்களில் 8 குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதியினை புஸ்பராணி தொண்டு நிறுவனம் வழங்கியுள்ளதாக அந் நிறுவனத் தலைவி திருமதி ஸ்ரீதர் பவிதா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில்,

மேற்படி கிராமங்களில் ஏற்பட்ட மினிசூறாவளியின் போது வீட்டுக் கூரைகள் தூக்கி வீசப்பட்ட 8 குடும்பங்களுக்கான உடனடி நிவாரண உதவியாக கிராம சேவையாளரின் வேண்டுகோளுக்கு அமைய உலர் உணவுப் பொதியினை வழங்கியுள்ளோம்.

மேலும் 11 குடும்பங்களுக்குரிய உலர் உணவுப் பொதிகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## இன்றைய இராசி பலன்

16.09.2014
(ஆவணி 31, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
அட்டமி பின்னிரவு 12.21 மணிவரை
மிருகசீரிடம் பின்னிரவு 2.58 மணிவரை
இராகுகாலம் 3.03-4.33 மணிவரை
சுபநேரம் 10.33-12.03 மணிவரை
மத்தியாஸ்டமி

வளவன்

**மீனம்** — உடன் பிறப்புக்களால் உற்சாகம் பெறுவீர்கள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மேடம்** — சவால்களை சமாளிக்கும் நாள், சகோதரர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள்புதிய பொருட் சேர்க்கையுண்டு போசன சுகமுண்டு.

**இடபம்** — சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், வியாபார விருத்தியுண்டு, வார்த்தைகளில் நிதானம் தேவை.

**மிதுனம்** — பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், கற்பனை மிகுதியான நாள்.

**கும்பம்** — பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், நட்பு வட்டம் விரிவடையும், புண்ணிய காரிய ங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு.

**கடகம்** — தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் உருவாகும்.

**மகரம்** — சேமிப்பை அதிகரிக்க முற்படு வீர்கள், பிரியமான சிலரின் சந் திப்புகள் இடம்பெறலாம், ஆரோ க்கியத்தில் முன்னேற்றம் காண் பீர்கள், கௌரவமான நாள்.

**சிம்மம்** — வெளிநாட்டுத் தொடர்புகள் அனுகூலம் தரும், நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள், வருமானம் திருப்திதரும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** — நீண்ட நாளைய ஆசையொன்று கைகூடும் வாய்ப்புண்டு, நண்ப களின் சந்திப்புகள் இடம் பெற லாம், முயற்சிகள் எளிதில் கை கூடும் நாள், பயணங்களால் பல னுண்டு.

**விருச்சிகம்** — எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, போசன சுகமுண்டு, தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

**துலாம்** — தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தந்தை வழி உறவில் மனம் நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கன்னி** — ஆடம்பர பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண நினைப்பீர்கள், உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுபோதையில் வாகனம் செலுத்திய நபர் விசாரணையின் பின்னர் விடுதலையானார்

(கரணவாய்)

மது போதையில் உழவு இயந் திரத்தை செலுத்தி சென்ற நபர் ஒருவர் நெல்லியடிப் பொலிஸாரினால் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,


நெல்லியடி வீதியூடாக குறித்த நபர் உழவு இயந்திரத்தில் வேகமாக பயணித்துக் கொண்டிருந்தார். அப்பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த நெல்லியடிப் பொலிஸார் இதனை அவதானித்து அந்நபரை தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இதன்போது அந்நபர் மதுபோதையில் உழவு இயந்திரம் செலுத்தியுள்ளதாகவும் சாரதி அனுமதிப்பத்திரம், வாகன அனுமதிப்பத்திரம் என்பன அவரிடம் இல்லை எனவும் பொலிஸாரினால் உறுதிப்படுத்தப்பட்டது.

இதனால் பொலிஸார் அந்நபரினை கைது செய்ததுடன் உழவு இயந்திரத்தையும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

இதனையடுத்து அந்நபர் விசார ணைக்குட்படுத்தப்பட்டு நேற்று முன் தினம் விடுவிக்கப்பட்டதுடன் அன்றைய தினமே உழவு இயந்திரமும் அந்நபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை எதிர்வரும் 19 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜராகும் படியும் பொலிஸார் கூறியுள்ளனர். (இ-60)




# 148 ஏக்கர் காணிகள் அபகரிப்புக்கு அளவீடு

(யாழ்ப்பாணம்)

கீரிமலையிலுள்ள 148 ஏக்கர் காணிகளை இராணுவ தேவைக்கு சுவீகரிப்பதற்காக எதிர்வரும் 19 ஆம் திகதி பொலிஸ் பாதுகாப்புடன் காணிகளை அளவிடும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வலி.வடக்கு பிரதேச சபையின் உப தவிசாளரும் மீள்குடியேற்றக் குழுஉறுப்பினருமான எஸ்.சஜீவன் தெரிவித்துள்ளார்.

காணி அளவிடுவதற்கான ஏற்பாடுகள் இராணுவத்தினரால் நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் திடீரென அது பிற்போடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

காணி அளவிடும் பணிகளை தடுத்து நிறுத்துவதற்கு பொது மக்கள் அணிதிரள தயாராக வேண்டும். யாழ்ப்பாணத்தில் பொது மக்களுடைய பெரும் தொகையான உறுதிக் காணிகள் இராணுவத்தின் தேவைக்காக சுவீகரிக்கப்படவுள்ளதாக அறிவித்தல்கள், துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டிருந்தன.

இவ்வாறு சுவீகரிப்பு அறிவித்தல்கள் ஒட்டப்பட்ட காணிகளை சட்டரீதியாக சுவீகரிப்பதற்கு காணிகளை அளவிடும் பணிகளை அண்மைக் காலமாக நில அளவைத் திணைக்களத்தினர் மேற்கொண்டு வந்திருந்தனர்.

இருந்த போதும் குறித்த காணிகளில் உரிமையாளர்களும், அரசியல் வாதிகளும் இணைந்து காணி அளவிட வந்த நில அளவைத் திணைக்களத்தினரை தடுத்து நிறத்தியிருந்தனர்.

குறிப்பாக கீரிமலையில் உள்ள 148 ஏக்கர் காணியினை சுவீகரிப்பதற்காக நில அளவை செய்ய வந்த திணைக்கள அதிகாரிகள் 4 முறை மக்களுடைய எதிர்ப்புப் போராட்டத்தின் மூலம் திரும்பி அனுப்பப்பட்டிருந்தனர்.

இதனால் வலி.வடக்கு இராணுவத்தினர் உயர் பாதுகாப்பு வலயத்தின் ஊடாக உள்நுழைந்த திணைக்கள அதிகாரிகள் நிறுத்திக் கொண்டனர். சில சந்தர்ப்பங்களில் காணிகளை அளவிட வருகைதந்து திரும்பியும் சென்றிருந்தனர்.

இந்நிலையில் சுவீகரிப்பு அறிவித்தல் வழங்கப்பட்ட காணிகளை உடனடியாக அளவிடுமாறும் நில அளவைத்திணைக்களத்திற்கு கொழும்பில் இருந்து அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பொலிஸாருடைய பாதுகாப்புடன் மீண்டும் காணி அளக்கும் நடவடிக்கையில் நில அளவைத் திணைக்களத்தினர் ஈடுபடவுள்ளனர்.

குறிப்பாக கீரிமலைக் காணிகளை அளப்பதற்கான நடவடிக்கைகளினை நில அளவைத் திணைக்களத்தினர் தற்போது மேற்கொண்டு வருகின்றனர். எதிர்வரும் 19 ஆம் திகதி கீரிமலைக் காணிகளை அளக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந் நடவடிக்கையினை தடுத்து நிறுத்துவதற்கு பொது மக்கள் மற்றும் அரசியல்வாதிகள் ஒன்றுதிரள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-4)

## வடமராட்சியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(கரணவாய்)

யாழ்.வடமராட்சி கரணவாய் பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களில் நேற்று தீவிர டெங்கு ஒழிப்பு நடவடிக்கை இடம் பெற்றது.

இதில் கரவெட்டி சுகாதார உத்தியோகத்தர்கள், நெல்லியடிப் பொலிஸார் ஆகியோர் இணைந்து இவ் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதேவேளை டெங்கு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் வீடு வீடாகச் சென்று கரவெட்டி சுகாதார உத்தியோகத்தர்கள், நெல்லியடி பொலிஸார் ஆகியோர் இணைந்து மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (இ-60)








யாழ்.கரவெட்டி கரணவாய்ப்பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கடும் மழையுடன் வீசிய மினி சூறாவளியினால் சேதமடைந்த தூவளி அம்மன் கோவில் தேர் முட்டியும் மற்றும் பல வீடுகள் சேதமடைந்துள்ளதை படங்களில் காணலாம். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

## ஒன்பது இலட்சம் ரூபா செலவில் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சி வரணிப் பிரதேச வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் தரிப்பிடமும் வைத்தியர் விடுதியும் சுகாதார அமைச்சின் 9 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் புனரமைக்கப்பட்டுள்ளது.

அம்புலன்ஸ் தரிப்பிடமும் விடுதியும் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.கேதீஸ்வரனால் திறந்து வைக்கப்படவுள்ளது.

குறித்த வேலைத்திட்டங்கள் கடந்த யூன் மாதத்தில் ஆரம்பித்து ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி முடிவடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-272)

## யாழ்.பல்கலைக்கழக டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஒத்துழைப்பு

யாழ்.பல்கலைக்கழகத்தில் டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.பாலகுமாரன் தெரிவித்தார்.

இவ்டெங்கு ஒழிப்பு நடவடிக்கை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினாலேயே முன்னெடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இவ் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையும் துப்புரவு செய்யப்படும் பணிகளும் ஒருவார காலம் வரையிலும் நீடிக்கும்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் டெங்கு நோயின் தாக்கம் சடுதியாக அதிகரித்துள்ள காரணத்தால் முகாமைத்துவ பீடத்தில் முதலாம் வருடமாணவர்களுக்கான விரிவுரைகளும் கலைப் பீடத்தில் சட்டத்துறை மற்றும் இராமநாதன் நுண்கலைத்துறை தவிர்ந்த முதலாம் மற்றும் இறுதி வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையிலேயே நேற்று முதல் யாழ். சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் பல்கலை. வளாகங்கள் மற்றும் விடுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

விடுதிகளில் இலங்கையின் அனைத்துப் பாகங்களைச் சேர்ந்த மாணவர்களும் தங்குவதனால் இது நாடு முழுவதும் பாதிப்பினை ஏற்படுத்தி விடக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது.

ஆகையால்தான் உடனடியாக விடுதிகளை மூடி சக மாணவர்களுக்கும் டெங்கு நோய்த்தாக்கம் ஏற்படாத வகையில் பல்கலை நிர்வாகம் செயற்பட்டுள்ளது.

விடுதிகள் சுத்தப்படுத்தப்பட்ட பின்னர் விரிவுரைகள் யாவும் வழமை போல மீள ஆரம்பமாகும் எனவும் தெரிவித்தார்.

மேலும் விடுதி வளாகத்தில் காணப்படுகின்ற சுகாதார சீர்கேடு மாணவர்களின் கவனயீனம் போன்றவற்றினால்தான் டெங்கு நோயின் தாக்கம் யாழ்.பல்கலைக்கழகத்தில் திடீரென அதிகரித்துள்ளது.

தற்போது விடுதிகளை மூடி சுத்தம் செய்யும் நடவடிக்கைகளை பல்கலை நிர்வாகம் மேற்கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கவின் பிரதித் தலைவர்? ரவி எம்.பியும் போட்டிக்களத்தில்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு அடுத்த வாரம் கூடவுள்ள நிலையில், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவை கட்சியின் பிரதித் தலைவராக நியமிக்கும் யோசனையை முன்வைக்க சில செயற்குழு உறுப்பினர்கள் தயாராகி வருகின்றனர்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாசவை கட்சியின் பிரதித் தலைவராக நியமிக்கும் யோசனை முன் வைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இந்த விடயம் குறித்து கலந்துரையாடப்பட உள்ளது.

கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசிங்க சஜித் பிரேமதாசவை பிரதித் தலைவராக நியமிக்கும் யோசனையை முன்வைக்கவுள்ளார்.

எவ்வாறாயினும் செயற்குழு உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினர்கள் ரவி கருணாநாயக்கவிற்கு ஆதரவு வழங்க உள்ளதாக பேசப்படுகிறது.

சஜித் பிரேமதாசவை கட்சியின் பிரதித் தலைவராக நியமிப்பது குறித்து ரவி கருணா நாயக்க விமர்சனங்களை முன்வைத்திருந்தார். தனிநபர்களை பிரபலப்படுத்தும் தருணம் இதுவல்ல என அவர் கூறியிருந்தார்.

ரவி கருணாநாயக்கவிற்கு ஆதரவு வழங்கும் செயற்குழு உறுப்பினர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ தலைமை தாங்குவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் இது குறித்து ரவி கருணாநாயக்கவோ, விஜயதாச ராஜபக்சவோ எந்த கருத்துக்களையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# பேருந்து விபத்தில் 14 பேர் படுகாயம்

(கொழும்பு)

காலி, தடல்லை எனும் இடத்தில் இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இச்சம்பவத்தில் காயமடைந்த 14 பேர் கராப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்றும் தனியார் பேருந்து ஒன்றும் மோதியதனாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. (இ)

# செயற்கை முறை சினைப்படுத்தல் மூலம் நல்லின பசுக்கன்றுகளை பெறும் திட்டம்

## பூநகரி பிரதேச கால்நடை அலுவலகம்

வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினால் செயற்கை முறை சினைப்படுத்தலின் மூலம் நல்லின பசுக்கன்று களைப் பெற்று அதனூடாக எதிர்காலத்தில் தன்னிறைவான பால் உற்பத்தியை அதிகரிக் கும் நோக்கில் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக பூநகரி பிரதேச கால்நடை வைத்திய அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் செயற்கை முறை சினைப்படுத்தலின் மூலம் இம்மாதத்தில் கிடைக்கப் பெறும் ஒவ்வொரு பசுக்கன்றுகளுக்கும்10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகிறது.

இக்குறித்த தொகை செயற்கைமுறை சினைப்படுத்தலின் மூலம் பெறப்படும் பசுக் கன்றுகளின் போசாக்கு நிலைமையைக் கருத்தில் கொண்டே வழங்கப்படுகின்றது.

இச்செயற்கை முறை சினைப்படுத்தலை பண்ணையாளர்கள் பசுமாடுகளுக்கு ஆர்வத்துடன் செய்வார்களாயின் எதிர்காலத்தில் தன்னிறைவான பால் உற்பத்தியை அவர்களால் பெருக்க முடியும்.

நல்லினப்பசுக்கன்றுகளால் நாளாந்தம் 5 தொடக்கம் 6லீற்றர் பாலை எதிர்காலத்தில் வழங்கமுடியும் என குறித்த அலுவலகம் தெரிவிக்கின்றது.

நல்லின பசுக்களை எதிர்காலத்தில் ஏற்படுத்தவே குறித்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாகதெரிவிக்கப்படுகின்றது.

இதன் மூலம் குறைந்தளவு பசுமாடுகளில் இருந்து மக்களின் தேவைக்கு ஏற்றவாறு அதிகளவு லீற்றர் பாலை பெறமுடியும்.

கட்டாக்காலி மாடுகளில் இருந்து நாளாந்தம் பெறப்படும் பாலின் அளவை விட செயற்கை முறை சினைப்படுத்தலின் மூலம் கிடைக்கப்பெறும் பசுக்கன்றுகளில் இருந்து எதிர்காலத்தில் போதியளவு பாலை பெற முடியும் என குறித்த அலுவலகம் தெரிவிக்கின்றது. (2)

# சீனாவின் ஜனாதிபதிக்கு பிரமாண்ட வரவேற்பு

## கட்டுநாயக்கவில் காத்திருக்கும் அரச தரப்பினர்

இரு நாள் உத்தியோகபூர்வ விஜயும் மேற்கொண்டு சீன ஜனாதிபதி ஹிஜின் பிங் இன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இந்நிலையில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட இருப்பதோடு சீன ஜனாதிபதியையும் பாரியாரையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரவேற்று அழைத்து வர இருப்பதாக ஜனாதிபதியின் சர்வதேச விவகார பணிப்பாளர் அநுராதா ஹேரத் தெரிவித்தார்.

28 வருடங்களின் பின்னர் சீன ஜனாதிபதி ஒருவர் இலங்கைக்கு வருகை தருகிறார். அவரின் விஜயத்துடன் இரு நாடுகளுக்குமிடையில் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட இருப்பதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் 2ஆம் 3 ஆம் கட்டங்கள் சீன மற்றும் இலங்கை ஜனாதிபதிகளினால் இன்று திறந்து வைக்கப்படவுள்ளன. மின் சக்தி தொடர்பில் இரு நாடுகளுக்குமிடையில் இரு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட இருப்பதாக மின்சார சபை தெரிவித்தது.

மின்சக்தி அமைச்சுடன் ஒரு ஒப்பந்தமும் மின்சார சபையுடன் ஒரு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படவுள்ளன. நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் 2 ஆம் 3 ஆம் கட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதோடு தேசிய மின் கட்டமைப்புடன் மொத்தமாக 900 மெகா வோர்ட் மின்சாரம் இணைக்கப்படுகிறது. ஜனாதிபதி செயலகத்தில் இருந்தே இரு நாட்டு தலைவர்களும் நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை திறந்து வைக்கவுள்ளனர்.

சீன ஜனாதிபதியின் இலங்கை விஜயத்தின போது 500 ஏக்கர் துறைமுக நகரத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவும் இடம்பெறும். இந்த திட்டம் 1400 மில்லியன் அமெரிக்க டொலர் சீன கடனுதவியுடன் முன்னெடுக்கப்பட இருப்பதோடு அது தொடர்பான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட இருப்பதாக துறைமுக, நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்தது.

கடலை நிரப்பி காலிமுகத்திடலுக்கு அப்பால் இந்த துறைமுக நகரம் உருவாக்கப்பட இருப்பதோடு சைனா கொன்ஸ்ட்ரக்சன் கொமுயுனிகேசன் கம்பனி பிரதான முதலீடு மேற்கொள்கிறது.

சீன ஜனாதிபதி இங்கு தங்கியிருக்கும் இரு நாட்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் டி. எம். ஜயரத்ன, சபாநாயகர் சமல் ராஜபக்ஷ ஆகியோரை சந்திப்பார். இதேவேளை சீன ஜனாதிபதியின் இலங்கை விஜயத்தின்போது இரு நாடுகளுக்குமிடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வாய்ப்பு இருப்பதாக பிரதி நிதி அமைச்சர் சரத் அமுனுகம மேலும் தெரிவித்தார். (இ)

# உலக சிறுவர் தின நிகழ்வு ஜனாதிபதி தலைமையில்




ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி கொண்டாடப்படவுள்ள உலக சிறுவர் தின தேசிய கொண்டாட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் மஹாரகம தேசிய இளைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்புடன்- எமக்கு பாதுகாப்பளியுங்கள் என்ற தொனிப்பொருளில் இம்முறை உலக சிறுவர் தினம் கொண்டாடப்படவுள்ளது.

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு விற்கப்படும் முதலாவது கொடி ஜனாதிபதிக்கு அணிவிக்கப்படவுள்ளது. மேலும் ஞாபகார்த்த முத்திரை என்பனவும் அன்றைய தினம் வெளியிடப்படவுள்ளது. (இ)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மிருகசிரிடம் 3<br>கி.பா: 56 1/2<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ அபிவிருத்தி உத்தியோகத்தர்.<br>தொ.இ: B/3579 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>கி.பா: 3 3/4<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>தொ.இ: G/2758 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: 41 1/2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: தொழில் நுட்ப உத்தியோகத்தர்<br>தொ.இ: B/3580 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 1<br>கி.பா: 32 செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSC/<br>தொ.இ: G/2759 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 2<br>கி.பா: 21 செவ் 1 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BSC/ MA/ அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: B/3581 | பிறப்பு: 1983 RC<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L உதவி கணக்காளர்<br>தொ.இ: G/2760 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 1<br>கி.பா: 14 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L, வியாபாரம்<br>தொ.இ: B/3582 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 23 செவ் 8 இல்<br>தகைமை/தொழில: A/L<br>தொ.இ: G/2761 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுங்கோல் அரசை எதிர்க்க மக்கள் அணி திரள வேண்டும்

## மனோ கணேசன் ஆவேசப் பேச்சு

நாம் நீண்டநாள் எதிர்பார்த்திருந்த சிங்கள மக்களின் மனமாற்றம் இந்த அரசுக்கு எதிராக இப்போது ஊவாவில் நிகழ்ந்து விட்டது. இங்கு வாழும் முஸ்லிம் சகோதரர்களும் எம்மோடு கரங் கோர்த்து கொண்டுள்ளார்கள். பதுளை மாவட்ட மலைநாட்டு தமிழ் மக்கள் மத்தியிலும் இப்போது இந்த அரசுக்கு எதிரான அலை அடிக்க தொடங்கிவிட்டது.

இங்கே நகரங்களில் வாழும் மலையக தமிழர்கள் இந்த கொடுங்கோல் அரசை எதிர்த்து வாக்களிக்க தீர்மானித்து விட்டார்கள். சிங்கள, முஸ்லிம் மற்றும் நகர வாழ் தமிழ் மக்கள் மத்தியில் அரசுக்கான ஆதரவில் ஏற்பட்டுள்ள பாரிய வீழ்ச்சியை பதுளை மாவட்ட தோட்ட தொழிலாளர்களின் வாக்குகளை கொண்டு நிரப்புவதற்கு இந்த அரசு பெரும் சதித்திட்டங்களை தீட்டி வருகிறது.

அரசுக்கு முட்டுக்கொடுக்கும் மலைநாட்டு பிற்போக்கு அரசியல் வியாபாரிகள் தமது எஜமானர்களை திருப்திப்படுத்த தோட்டங்களில் சாராய காட்டாற்றை ஓடவிட முயற்சிக்கின்றார்கள். இதுதான் இவர்களால் முடிந்த இவர்களது இறுதி முயற்சி.

இந்த முயற்சிகளை இப்போது நாம் எம் கடும் உழைப்பால் முறியடித்துள்ளோம். தோட்ட தொழிலாளர்களை சாராயம் கொடுத்து விலைக்கு வாங்கும் காலமெல்லாம் மலையேறி போய்விட்டது. இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன். பதுளை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பிரசார கூட்டங்களில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த தேர்தல் பதுளை மாவட்டத்துக்கும் ஊவா மாகாணத்துக்கும் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட தேர்தல் அல்ல. முழுநாடும் இன்று ஊவாவை திரும்பி பார்த்துக் கொண்டுள்ளது. அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஆட்சிமாற்றத்துக்கு அடிகோலும் தேர்தல் இது வாகும்.

இதைவிட இனி ஒரு மாகாண சபை தேர்தல் இப்போது இடையில் இல்லை. இதுதான் கடைசி தேர்தல். இதில் நாம் விடுக்கும் செய்தி, கொடுக்கும் அடி இந்த கொடுங்கோல் அரசுக்கு மரண அடியாக இருக்க வேண்டும்.

அரிசி, சீனி, மா, பால்மா ஆகிய அத்தியாவசிய பொருட்களின் விலைகளை உயர்த்தி, தோட்ட தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்கும் அரசுக்கு நாம் அடி கொடுக்கும் சந்தர்ப்பம் இதுவாகும். இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மக்களின் வணக்க ஸ்தலங்களை இடிக்கும் அரசை நாம் இடித்து எறியும் சந்தர்ப்பம் இதுவாகும். இந்த அரசில் அடைக்கலம் புகுந்துள்ள மலைநாட்டு அரசியல் வியாபாரிகள் என்ன சொல்கிறார்கள்? இந்த நாட்டில் நாம் ஜனாதிபதியாக முடியாதாம். ஆட்சி அமைக்க முடியாதாம். ஆகவே ஆளும் அரசில் இணைந்து பலமாக இருப்பதுதான் நமக்கு நல்லதாம்.

பண்டாரவளை பகுதி தோட்டம் ஒன்றை கடந்து செல்லும்போது ஒரு மலையக கட்சி தலைவர் இப்படி பேசிக்கொண்டிருப்பதை நான் கேட்டேன். இதை கேட்கும் போதும் சிரிப்புதான் வருகிறது. இவர் ஒரு நகைச்சுவை நடிகரை போல் பேசிக கொண்டிருக்கிறார்.

இந்த நாட்டில் சிறுபான்மையினராகிய நாம் தனித்து ஆட்சியமைக்க முடியாது என்பது எனக்கு தெரியும். ஜனாதிபதியாக முடியாது என்பதும் எனக்கு தெரியும். முடியுமானால் நான்தான் இந்த நாட்டின் ஜனாதிபதி. அந்த தன்னம்பிக்கையும் கடும் உழைப்பும் என்னிடம் இருக்கிறது. ஆனால், நான் ஒரு தமிழன். இது இன்றைய கால கட்டத்தில் முடியாது. ஆனால் அதற்காக நம்மையே அழிக்கும் ஆட்சியில் நாம் அங்கம் வகிக்க முடியுமா? என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# மரண வீட்டில் குண்டு வெடிப்பு

## நால்வர் காயம்

நொச்சியாகம பிரதேச மரண வீடொன்றில், நேற்று திங்கட் கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் நால்வர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிதத மரண வீட்டுக்கு வெளியே, உணவு சமைத்துக்கொண்டிருந்த போதே இந்த குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உணவு சமைப்பதற்காக அடுப்பு மூட்டப்பட்ட போதே இந்த வெடிப்பு இடம்பெற்றதாகவும் அடுப்பு மூட்டப்பட்ட இடத்தில் புதைக்கப்பட்டிருந்த குண்டொன்றே இவ்வாறு வெடித்து இருக்கலாம் என சந்தேகிப்பதாகவும் நொச்சியாகம பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 90 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 120 |
| தக்காளி | 30 | 40 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 60 | 60 | 60 |
| கரட் | 70 | 50 | 100 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 70 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 60 | 80 | 50-100 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 90 |
| பாகற்காய் | 90 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 90 | 60 | 120 |
| பயற்றங்காய் | 30 | 50 | 60 |
| லீக்ஸ் | 100 | 80 | 100 |
| பீற்றூட் | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 60 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 20 | 60 | 60 |
| போஞ்சி | 100 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 70 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 30 | 25-35 |
| இராசவள்ளி | 120 | 100 | 100 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 137

விமலன் சந்தானம்




றுட்ற குண





சிவசிதம்பரம் மகிழ்நன் சிவநாசிம




தில்லை அம்பலவாணர் விமலன்




ரத்தினசபாபதி பாலராஜா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 52 விவசாயிகளுக்கு நட்டஈட்டு காப்புறுதி பணம் வழங்கப்பட்டது

## கமத்தொழில் மற்றும் கமநலக்காப்புறுதி சபையின் முல்லை, வவுனியா மாவட்டங்களின் பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

முல்லை மாவட்டத்தின் 2013, 2014 காலபோக நெற்செய்கையில் 6 ஆயிரத்து 658 ஏக்கருக்கான செய்கை வறட்சி காரணமாக அழிவடைந்த நிலையில் மத்திய நிதியமைச்சின் கீழ் இயங்கும் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையின் மூலம் காப்புறுதி செய்த புதுக்குடியிருப்பு, குமுழமுனை, முள்ளியவளை, பாண்டியன்குளம், துணுக்காய் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 52 விவசாயிகளுக்கு 11 இலட்சத்து 90 ஆயிரத்து 856 ரூபா இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளதாக கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையின் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களின் பிரதிப்பணிப்பாளர் பி.பூரணசந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கடந்த 11 ஆம் திகதி ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையத்தில் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையின் தலைவர் ஆரியதிலக தகாநாயக்க தலைமையில் நடைபெற்றநிகழ்வின்போது முல்லை. மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு காப்புறுதி பணத்தினை வழங்கி வைத்துள்ளார்.

இந்நிகழ்வின் போது புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் ஆறு விவசாயிகளுக்கு 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், குமுழமுனை கிராமத்தில் 19 விவசாயிகளுக்கு 5 இலட்சத்து 44 ஆயிரத்து 359 ரூபாவும் துணுக்காய் கமநலசேவை நிலையத்தின் கீழ் விவசாயி ஒருவருக்கு 15 ஆயிரத்து 900 ஆயிரத்து 98 ரூபாவும் பாண்டியன்குளம் கமநலசேவை நிலையத்தின் கீழ் ஆறு விவசாயிகளுக்கு ஒரு இலட்சத்து 70 ஆயிரத்து 450 ரூபாவும் முள்ளியவளை கிராம்த்தில் ஆறு விவசாயிகளுக்கு ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 50 ரூபாவுமாக மொத்தம் 52 விவசாயிகளுக்கு 11 இலட்சத்து 90 ஆயிரத்து 856 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின்போது முல்லை மாவட்ட கமத்தொழில் அபிவிருத்தித்திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ராஜரட்ணம் விஜயகுமார் உட்பட கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையின் பொது முகாமையாளர் பண்டுல வீரசிங்க உட்பட அரச, தனியார் வங்கிகளின் முகாமையாளர்கள், விவசாயிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர் என அவர் மேலும் கூறினார்.

கடந்த 02.09.2014 அன்று வலம்புரி பத்திரிகையில் "விவசாயிகளுக்கான நெற்செய்கை நட்டஈட்டு காப்புறுதி பணம் வழங்குவதில் இழுத்தடிப்பு'' எனும் தலைப்பில் வெளியாகியிருந்த செய்தியை அடுத்து மேற்படி இடங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு நட்டஈட்டு காப்புறுதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-15)

# விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான காணி வழங்க பிரதேச செயலகம் பின்னடிப்பு

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை தவிசாளர் குற்றச்சாட்டு

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் விளையாட்டு மைதானத்துக்கான காணியை வவுனியா பிரதேச செயலாளர் இன்னமும் வழங்கவில்லை என வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தவிசாளர் க.சிவலிங்கம்குற்றம் சாட்டியுள்ளார.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஜுலை மாதம் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் மற்றும் வன்னி அபிவிருத்திக் குழுவின் தலைவர் அமைச்சர் றிசாட் பதியூதின் ஆகியோரின இணைத் தலைமையில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில், விளையாட்டு மைதானத்துக்கான காணியை எமது சபையிடம் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இன்றுவரை பிரதேச செயலகத்தால் காணி வழங்கப்படவில்லை. ஓமந்தைப் பகுதியில் வவுனியா மாவட்டத்துக்கான விளையாட்டு மைதானத்துக்கு காணியை நாம் ஏற்கனவே பிரதேச செயலாளரிடம் கோரயிருந்த போதும், அவர் அதனைத் தர மறுத்திருந்தார்.

இந்நிலையில் அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் இது தொடர்பாக தெரியப்படுத்தி இணைத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு அந்தக் காணியை எம்மிடம் வழங்கும் படி அறிவித்திருந்தனர்.

ஆனால் காணியை வழங்க பிரதேச செயலகம் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் எமது வரவு செலவுத் திட்டத்தில் மைதானம் நிறுவுவதற்கு என ஒதுக்கப்பட்ட நிதி பயன்பாடு இன்றி இருக்கிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். (2-250)




# முல்லைக்கான பிரதேச செயலர்கள் நியமிக்கப்படாமையால் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பதில் இழுபறி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 பிரதேச செயலர் பிரிவுகள் காணப்படுகின்றன.

வன்னி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் 2009ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 40 ஆயிரத்து 413 குடும்பங்கள் தற்போது வாழ்ந்து வருகின்றன.

இந்நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவு, மணலாறு (வெலிஓயா) பிரதேச செயலர் பிரிவு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு நீண்டகாலமாக நிரந்தர பிரதேச செயலர்கள் நியமிக்கப்படாமையால் அப்பகுதிகளில் முன்னெடுக்கப்படவேண்டிய மக்களுக்கான பல அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் இன்னும் இழுபறியில் காணப்படுகின்றன.

அப்பகுதிகளில் பிரதேச செயலருக்கு பதிலாக உதவி பிரதேச செயலர்களே கடமையாற்றி வருகின்றனர்.

இதேபோல் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவு, துணுக்காய் பிரதேச செயலர் பிரிவு ஆகியவற்றுக்கு நீண்ட காலமாக உதவி பிரதேச செயலர்கள் நியமிக்கப்படாமையால் மக்கள் பல்வேறுபட்ட அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மக்கள் மீள் குடியேறி நான்கு வருடங்கள் கடந்துள்ள நிலையில் மக்களுக்கான நிரந்தர வீட்டுத்திட்டம், காணி வழங்கும் திட்டம், மின்சாரம், தொழில் முயற்சிகள், வீதி புனரமைப்பு மற்றும் மக்கள் நலத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் பிரதேச செயலர், உதவி பிரதேச செயலர் நியமிக்கப்படவேண்டும்.

அப்போதுதான் ஒரு கிராமம் முழுமையான அபிவிருத்தியை அடையமுடியும்.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் குறைந்த சனத்தொகையை கொண்ட காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்கு பிரதேச செயலர், உதவி பிரதேச செயலர் நியமிக்கப்படலாமென்றால் போரால் பாதிக்கப்பட்ட அதிக சனத்தொகையைக் கொண்ட குறித்த பிரதேச செயலர் பிரிவுகளுக்கு ஏன் நியமிக்கமுடியாது என முல்லைத்தீவு மாவட்ட மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேள்வி எழுப்புகின்றனர். (2-267)



கிளிநொச்சி அக்கராயன் கரித்தாஸ் குடியிருப்பு மக்களின் குடிநீருக்கான பொதுக்கிணறு ஒன்று அமைக்கப்பட்டு நேற்றைய தினம் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த அமரர் வேலுப்பிள்ளை குணரத்தினத்தின் ஞாபகார்த்தமாக குறித்த குடிநீருக்கான பொதுக்கிணறு அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி மாவட்ட கிராமங்களுக்கான மின்சார இணைப்பு முழுமை பெறவில்லை

## பாதிக்கப்பட்ட மக்கள் ஆதங்கம்

(கிளிநொச்சி)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் அனைவருக்கும் மின்சாரம் என்ற நிலைப்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் பல பின்தங்கிய கிராமங்களுக்கு மின்சார விநியோக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இருப்பினும் சில கிராமங்களில் இவ்வேலைத்திட்டம் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத நிலையில் அரைகுறையாக உள்ளதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக மின்கம்பங்கள் நாட்டப்பட்டு மின்சாரம் வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆனாலும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மின்சார சபையின் ஊடாகவே பாவனையாளர்களுக்கான மின்சாரம் வழங்கப்படுகிறது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் அநேகமான பின்தங்கிய கிராமங்களில் ஒரு சில வீடுகளுக்கு மின்சார இணைப்புக்கள் வழங்கியும் அதற்கு அண்மையிலுள்ள சிலருக்கு மின்சார இணைப்புகளை வழங்காமலும் சென்றுவிடுகின்றனர்.

மின்சார இணைப்பை வழங்குபவர்கள் "இன்று பிற்பகல் அல்லது நாளை வருவோம்" எனக் கூறிவிட்டு சென்று விடுவார்கள். ஆனால் அவர்களுக்காக காத்திருந்தும் வருவதில்லையென பாதிக்கப்பட்ட மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் வருவோம் எனக் கூறியமையால் அன்றாட கடமைகளுக்கு செல்வோரும் இவர்களின் வருகையை எதிர்பார்த்து காத்திருந்து ஏமாற்றமடையும் நிலையே காணப்படுகிறது.

ஒரு கிராமத்தை பொறுத்தவரையில் அங்கு வீடுகளுக்கு வழங்கப்பட வேண்டிய மின்சார இணைப்புக்களை முழுமையாக பூர்த்தியாக்காது அடுத்து கிராமங்களுக்கு செல்வதால் இந்த மின்சார வேலைத் திட்டத்தின் பலன் முழுமையாக மக்களை போய் சேர்வதில்லை.

இத்தகைய நிலைக்கு பொறுப்பான அதிகாரிகள் யார்? என மக்களால் கேள்வி எழுப்பப்படுகிறது.

எனவே மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு இந்த மின்சார விநியோகம் வழங்குதலை ஒழுங்குபடுத்தி தமக்கான மின்சாரம் விரைவில் கிடைக்க ஆவனசெய்ய வேண்டுமென கிளிநொச்சி மாவட்டத்தின் பாதிக்கப்பட்ட பல கிராமத்து மக்களாலும் கோரிக்கை விடுக்கப்படுகிறது. (2-254)

# சாரதியின் சாதுரியத்தால் மாணவர்கள் உயிர் தப்பினர்

## வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் முன்பாக சம்பவம்

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் முன்பாக உள்ள பாதசாரிகள் கடவையில் இடம்பெற்ற வாகன விபத்தில் மாணவர்கள் மயிரிழையில் தப்பியுள்ளனர்.

நேற்றுக்காலை 7.35 மணியளவில் பாடசாலை முன்பாகவுள்ள பாதசாரிகள் கடவையில் கடமையில் நின்ற பொலிஸார் குறித்த கடவையூடாக மாணவர்கள் செல்வதற்காக அவ்வீதி வழியாக பயணித்த வாகனங்களை தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இதன்போது மூன்றுமுறிப்பு பகுதியில் இருந்து வவுனியா நகரை நோக்கி வந்த இராணுவத்தின் தண்ணீர் பௌசருடன நிறுத்தப்பட்ட போது அதன் பின்னால் வந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து கட்டுப்பாட்டை இழந்து தண்ணீர் பௌசருடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது தண்ணீர் பௌசரை செலுத்திய சாரதி தனது வாகனத்தை நகர விடாது கட்டுப்படுத்தியதால் மஞ்சள் கடவையில் பயணித்த மாணவர்களுக்கு எந்த வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை. இது தொடர்பான விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (2-250)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

923

# போலிச் சந்நியாசி



....இளம் வயதில் எல்லாவற்றையும் துறந்தவனே உண்மையான துறவி. ஐம்புலன்களின் துணையோடு இவ்வுலக இன்பங்களை அனுபவித்து அதனால் நலிந்து போன்வன் எவனால் தான் புலனடக்கத்தோடு இருக்க முடியும்?

பண்புள்ளவர்களுடைய மனது முதலிலும் உடல் அதற்குப் பிறகும் முதுமை அடைகின்றது. கெட்டவர்களின் விடயத்தில் உடல் மட்டும் முதுமை அடைகிறதே தவிர, மனமானது முதுமை அடைவதே இல்லை.

சம்சார சாகரத்தைக் கடக்கும் ரகசியத்தைப் பற்றி நீ கேட்கிறாய். நான் அது பற்றி இப்போது உனக்குக் கூறுகிறேன்.

எந்தக் குலத்தில் பிறந்தவன் ஆனாலும், இறைவன் முன்னிலையில் எல்லோரும் சமமானவர்களே! சண்டாளன், சூத்திரன், அந்நியன், சடைமுடி உடையவன், காவியுடை உடுத்தியவன் என எத்தகையோராக இருந்தபோதிலும் குருவின் மூலம் சிவமந்திர உபதேசத்தை அவன் பெற்றுவிட்டால், அவன் திருநூறு பூசிய அந்தணன் ஆகிவிடுகிறான்.

தினந்தோறும் நீராடி, சிவமந்திரத்தை உச்சரித்து ஒரு மலரை சிவலிங்கத்தின் முடியில் வைத்து வழிபடுகிறவர்களுக்கு மறு பிறப்பு என்பது இல்லை என்று கூறினான் தேவசர்மா.

இதைக் கேட்டுக் கொண்ட ஆஷாடபூதி தேவசர்மாவின் பாதங்களைப் பிடித்துக்கொண்டு மிகவும் பணிவாக, சுவாமி! எனக்கு விரதம் ஒன்றை உபதேசித்து அருள் புரிய வேண்டும் என்று வேண்டிக்கொண்டான்.

அப்படியே செய்கிறேன். இரவில் நீ மடத்துக்குள் நுழையக் கூடாது. ஏனெனில், பற்றற்ற சந்நியாசிகள் ஒன்று சேர்ந்து இருக்கக்கூடாது என்று எனக்கும் உனக்கும் சொல்லப்பட்டிருக்கிறது.

அமைச்சர்களின் தீய அறிவுரைகளால் அரசன் அழிகிறான். உலக வாழ்வில் பற்று வைப்பதால் சந்நியாசி கெட்டுப் போகிறான். பெற்றோர் செல்லம் கொடுப்பதால் குழந்தை கெடுகிறது. மறைகளை ஓதாததால் பிராமணன் கெடுகிறான். கெட்ட நடத்தையுடைய புதல்வனால் குடும்பம் கெடுகிறது. முட்டாளின் சொற்களால் நல்ல குணம் கெடுகிறது. மரியாதைக் குறைவான நடத்தையால் நட்பு கெடுகிறது. நீண்டநாள் பிரிவால் பாசம் கெடுகிறது. மது அருந்துவதால் பெண் கெடுகிறாள்.

கவனம் செலுத்தாமையால் நிலம் பாழாகிறது. கெட்ட நடத்தையால் செல்வம் அழிகிறது. வரவுக்கு மிஞ்சிய செலவால் பணம் அழிகிறது.

ஆகையால் நீ விரதம் எடுத்துக் கொண்டு, மடத்தின் முன்புறத்திலுள்ள குடிசையில் படுத்து உறங்க வேண்டும் என்று சந்நியாசி கூறினான்.

சுவாமி! தங்கள் கட்டளைப்படியே செய்கிறேன். எனக்கு மறுபிறவியில் அதற்கான பலன் கிடைக்கட்டும் என்று கூறினான். ஆஷாடபூதி.

ஆஷாடபூதி படுக்கைக்குச் செல்லும் முன் அவனுக்கு உபதேசம் செய்து அவனை தன் சீடனாக்கிக்கொண்டான் சந்நியாசி.

ஆஷாடபூதி குருவுக்குக் கால் பிடித்து விட்டான். அவருக்குத் தேவையானவற்றைக் கொண்டு வந்து கொடுத்தான். மேலும் பல உபசாரங்கள் செய்து குருவைக் களிப்புறச் செய்தான்.

என்னதான் அவன் உபசாரம் செய்தாலும், எவ்வளவுதான் அவனுக்குப் பணிவிடைகள் செய்தபோதிலும் சந்நியாசி மட்டும் அந்தப் பணப்பையைத் தன் அக்குளிலிருந்து எடுக்கவே இல்லை.

இப்படியாக நாட்கள் சென்றன. ஆஷாடபூதிக்கு இதையெல்லாம் பார்த்து ஆத்திரம் தாளவில்லை. இது என்ன கெட்டகாலமோ தெரியவில்லையே. சந்நியாசிக்கு என்மீது நம்பிக்கை உண்டாகவில்லையே. பகலிலேயே அவனைக் குத்திக் கொன்று விட்டால் என்ன? இவனுடைய உணவில் விசத்தைக் கலந்து கொடுத்தால் என்ன? ஆடுமாடுகளை அடித்துக் கொல்வதைப்போல் இவனைச் சாகடித்தால் தான் என்ன?, என்றெல்லாம் ஆஷாடபூதி சிந்திக்கலானான்.

இவன் இவ்வாறு சிந்தனையில் ஆழ்ந்திருக்கும்போது சந்நியாசி தேவசர்மாவின் மற்றொரு சீடனின் புத்திரன் ஒருவன், குருவை அழைத்துச் செல்வதற்காக கிராமத்திலிருந்து அங்கு வந்து சேர்ந்தான். சுவாமி எனக்கு உபநயனச் சடங்கு நடைபெறுவதால் தாங்கள் என் வீட்டுக்கு வந்து அருள்புரிய வேண்டும் என அவன் வேண்டிக் கொண்டான். தேவசர்மாவும் அதற்கு இணங்கி, ஆஷாடபூதியுடன் புறப்பட்டான். வழியில் நதி ஒன்று குறுக்கிட்டது.

(தொடரும்)



## 09.2014 16 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1795- ஐக்கிய இராச்சியம் தென்னாபிரிக்காவின் கேப்டவுண் நகரைக் கைப்பற்றியது.
- 1810 - மிகுவேல் ஹிடால்கோ என்ற மதகுரு மெக்சிகோவின் விடுதலைப் போரை ஆரம்பித்தார்.
- 1812 - முதலாம் நெப்போலியன் மொஸ்கோவினுள் நுழைந்ததை அடுத்து ரஷ்ய மக்கள் நள்ளிரவில் நகரை தீயிட்டுக் கொழுத்தினர். மொஸ்கோ நகரம் அடுத்த சில நாட்களில் முற்றாக எரிந்தது.
- 1852- லண்டனில் , மான்செஸ்டர் நகரில் உலகின் முதலாவது இலவச நூல் நிலையம் அமைக்கப்பட்டது.
- 1887 - மென்பந்தாட்டம் முதன் முதலில் சிக்காகோவில் விளையாடப்பட்டது.
- 1908 - ஜெனரல் மோட்டர்ஸ் நிறுவனம் அமைக்கப்பட்டது.
- 1963- மலாயா, சிங்கப்பூர், மற்றும் போர்ணியோவின் சாபா, சரவாக் ஆகியன இணைந்து மலேசியா உருவாக்கப்பட்டது.
- 1970 - ஜோர்தானில் நான்கு பயணிகள் விமானங்கள் பாலஸ்தீனத் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டதை அடுத்து மன்னர் ஹுசெயின் இராணுவ ஆட்சியை அறிவித்தார்.
- 1975 - பப்புவா நியூ கினியா, அவுஸ்திரேலியாவிடமிருந்து விடுதலை பெற்றது.
- 1987 - ஓசோன் படலத்தைப் பாதுகாக்கும் பிரகடனம் மொண்ட்றியால் நகரில் கைச்சாத்திடப்பட்டது.
- 2002 - விடுதலைப் புலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்க அரசுக்குமிடையிலான பேச்சுவார்த்தை தாய்லாந்தில் ஆரம்பமாயின.

பிறப்புகள்

- 1916 - எம். எஸ். சுப்புலட்சுமி, இந்திய கர்நாடக இசைப் பாடகர், (இ. 2004)
- 1923 - லீ குவான் யூ, சிங்கப்பூரின் முன்னாள் தலைவர்
- 1945 - ப. சிதம்பரம், இந்திய அரசியல்வாதி

இறப்புகள்

- 1736 - கப்றியேல் ஃபாரென்ஹைட், ஜேர்மனிய இயற்பியலாளர் (பி. 1686)
- 1824 - பதினெட்டாம் லூயி, பிரான்சின் மன்னன் (பி. 1755)
- 1932 - றொனால்ட் றொஸ், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேய மருத்துவர் (பி. 1857)
- 1994 - சு. பொன்னம்பலம், யாழ்ப்பாணத்தின் பிரபல சத்திர சிகிச்சை நிபுணர் (பி. 1928)
- 1998 - கோ. கேசவன், தமிழியல் ஆய்வாளர் (பி. 1946)
- 2000 - எம். எச். எம். அஷ்ரப் , இலங்கை முஸ்லிம் தலைவர் (பி. 1948)
- 2005 - தென்கச்சி கோ. சுவாமிநாதன், தமிழகப் பேச்சாளர் எழுத்தாளர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்




...வெளிநாடுகளில் இருக்கும் போது எனது குழந்தைகளின் பிறந்த நாள் விழாக்களில் கலந்துகொள்ள முடியாமல் போய்விடும். அந்தத் தருணங்களில் அவர்களைச் சமாதானப்படுத்தி குழந்தைகளுக்கு நான் இல்லாத குறையைப் போக்குவது அஞ்சலிதான். ஏதேனும் பரிசுப் பொருட்களை வாங்கி நான்தான் வெளிநாட்டிலிருந்து அனுப்பி வைத்தேன் என்று குழந்தையிடம் கூறுவார். இது பொய்தான் என்றாலும் அந்தக் குழந்தையின் முகத்தில் தோன்றும் புன்னகை- அப்பா நம்மை மறக்கவில்லை என்ற சந்தோஷம்- இவற்றின் முன்னால் எந்தப் பொய்யுமே பொய்யில்லை என்று நெகிழ்கிறார்.

புகழ்பெற்ற மனிதனாக இருப்பது ஒருவிதத்தில் மகிழ்ச்சி தரக்கூடியது தான் என்றாலும், புகழ் ஒளி தனி மனித சுதந்திரத்தைப் பறிக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. இது சச்சினுக்கும் பொருந்தும். சச்சின் நடந்தாலும், ஓடினாலும், சிரித்தாலும் எல்லாம் செய்தியாகிவிடுகின்றன. தன்னைச் சுற்றி எப்போதும் காமிராக்கள், செய்தியாளர்கள் என்ற நிலையிலிருந்து விடுபட்டு கொஞ்ச நேரம் தனிமை கிடைக்குமா என்று சச்சினின் மனம் ஏங்கியது!

முன்பெல்லாம் வெளிநாடுகளுக்கு டூர் செல்லும்போது குடும்பத்தினரையும் அழைத்துச் சென்றார்கள். ஆனால், கிரிக்கெட் வாரியம் தற்போது குடும்பத்தினரை அழைத்துச் செல்லத் தடை விதித்துவிட்டது. குடும்பத்தினருடன் நேரத்தைச் செலவிடுவதால் பயிற்சியில் பங்கேற்க முடிவதில்லை. அடுத்தநாள்



போட்டியிலும் சரியாக ஆட முடிவதில்லை என்று பல சமயங்களில் நிரூபணமாகி இருந்தது. ஆக, நீண்ட நாட்கள் வெளிநாடு பயணம் என்றாலும் சச்சின் தனது குடும்பத்தை விட்டுப் பிரிந்தே இருக்க வேண்டிய கட்டாயம். விளையாடி விட்டு ஹோட்டல் திரும்பும்போது பல சந்தர்ப்பங்களில் குடும்பத்தின் நினைவு சச்சினை வாட்டியுள்ளதாக சச்சினே கூறியிருக்கிறார். அதே சமயம் கிரிக்கெட் இல்லாத நாட்களில் குடும்பத்தைத் தவிர வேறு எதையுமே சச்சின் நினைப்பதில்லை. வேறு எந்த நிகழ்ச்சிக்கும் சச்சின் ஒத்துக்கொள்வதில்லை. ஊரில் இருக்கும்போது தவறாமல் பெற்றோர்- ஆசிரியர் தினத்தில் கலந்து கொள்வது என்பதைக் கொள்கையாகவே வைத்துக்

### குடும்பம் வேறு தொழில் வேறு

கொண்டிருக்கிறார். ஏனைய பிள்ளைகள் அப்பாவுடன் வரும்போது தனது குழந்தைகள் அப்பா வரவில்லையே என்று ஏங்கக்கூடாது என்பது சச்சினின் எண்ணம். இதற்காக சச்சின் தனக்கு விருது வழங்கும் பல விழாக்களைக்கூட குழந்தைகளுக்காகத் தவிர்த்து இருக்கிறார். இதை விருது வழங்குவோரை அவமானப்படுத்தும் செயலாக கருதக் கூடாது. குழந்தைக்குக் கிடைக்கும் கொஞ்ச சந்தோஷமும் தன்னால் கெடக் கூடாது என்ற ஒரு தந்தையின் நியாயமான பாசம்தான் இதற்குக் காரணம் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

ஒரு புகழ்பெற்ற கிரிக்கெட் வீரரின் குழந்தைகளாக அர்ஜுனும் சாராவும் வளர்க்கப்படவில்லை. தன்னுடைய புகழ் மற்றும் பணம் ஆகியவற்றின் நிழல் தனது பிள்ளைகள் மீது படக்கூடாது என்பதில் கண்டிப்புடன் இருந்தார் சச்சின். பள்ளியில் படிக்கும் ஏனைய குழந்தைகள்போல் இருவரும் வளர வேண்டும் என்று விரும்பியது மட்டுமன்றி அப்படியே வளர்க்கவும் செய்தார். அஞ்சலியும் இதே அலைவரிசையில் இருந்தது கூடுதல் விசேடம். எல்லோருடனும் சகஜமாகப் பழக வேண்டும். அனைவரையும் சரிசமமாக மதிக்க வேண்டும். நமது கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம், மொழி ஆகியவற்றின் மீது பற்று வேண்டும் என்பதில் சச்சின் உறுதி காட்டினார். டில்லிக்கு ராஜாவானாலும் தில்லிக்குப் பிள்ளைதானே என்ற பழமொழிக்கு ஏற்ப சச்சின் அகிலம் புகழும் ஆட்டக்காரராக இருந்தாலும் தான் தனது பிள்ளைக்கு சாதாரண அப்பாதான் என்று எண்ணியது ஆச்சரியம்தான்.

கொஞ்சம் புகழும், பணமும் சேர்ந்து விட்டாலே ஆட்டம் போடும் இன்றைய இளைஞர்களுக்கு மத்தியில் அடக்கத்தின் உருவமாகத் திகழும் சச்சின் மிகச் சிறந்த உதாரணம் மட்டுமில்லை. அவர்களுக்கு வழிகாட்டியும் கூடத்தான். சச்சினின் பேட்டிங்கில் 1992 மற்றும் 1996 உலகக் கோப்பைகளுக்கு இடையேயான நான்கு ஆண்டுகளில் மெருகு கூடியிருந்தது. அனுபவம் அவரை நன்றாக செதுக்கி இருந்தது. உலகின் தலைசிறந்த பேட்ஸ்மென்களில் ஒருவராக அவர் கருதப்படத் துவங்கினார். எனவே, 1996 உலகக் கோப்பைப் போட்டியில் சச்சின் குறித்த எதிர்ப்பார்ப்புகள் அதிகமாயின. உலகக் கோப்பைப் போட்டிகளை நடத்த தொடக்கம் முதலே இங்கிலாந்து கோரி வந்தது.

கே. ரமேஷ் (தொடரும்)


# ஆத்ம ஞானத்தைத் தேடி

...இது நமது உணர்ச்சிகள் ஆற்றல் மையங்களான சக்கரங்களின் மீது ஏற்படுத்தும் பாதிப்பாகும்.

எதிர்மறை எண்ணங்களால் இந்தச் சக்கரங்களில் நமது சக்தி ஓட்டமானது தடைப்படுகிறது. இதை நாம் முழுமையாக அறிவதேயில்லை.

புரிந்து கொள்ளுங்கள்; மனிதன் புழுவைப் போன்று தரையில் ஊர்ந்து செல்வதற்காக வடிவமைக்கப்படுவதில்லை. அவன் காற்றில் பறப்

7 Chakras Chart




பதற்காக வடிமைக்கப்பட்டிருக்கிறான். பறப்பதைப் பற்றிய அறிவியலானது நமது சக்கரங்கள் எவ்வாறு கையாள்வது, நமது உணர்ச்சிகளை எவ்வாறு கையாள்வது என்பதைப் பற்றிய அறிவியலைக் கற்பதைத் தவிர வேறில்லை. அந்த ஏழு சக்கரங்களையும் எவ்வாறு உபயோகப்படுத்துவது என்பதைக் கற்றாலே போதுமானது.

அந்தக் கிராமவாசிகளுக்கு அந்தக் கருவி பறக்கும் என்பதைப் பற்றிய சிந்தனை எவ்வாறு கிடையாதோ அவ்வாறே மனித்னுக்கும் தன்னால் பறக்க முடியும் என்ற எண்ணம் கிடையாது. ஞானிகள் அதிஷ்டசாலிகள். அவர்களிடமிருந்து சற்று விலகியே நின்று அவர்களை அச்சத்துடனும் மரியாதையுடனும் நோக்க வேண்டும் என்றே மனிதன் எப்பொழுதும் நினைக்கிறான். அவன் தானும் அவர்களைப் போல ஆகவேண்டும் என்று விரும்புவதில்லை. நான் சொல்கிறேன்... உங்களுக்கு உண்மையிலேயே உள் உலகில் சாதணை செய்ய வேண்டும் என்ற விருப்பம் இருப்பின் எதுவரினும் நீங்கள் சாதிப்பீர்கள். உங்களால் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இல்லாததுதான் பிரச்சினை. எவ்வாறு கிராமவாசிகள் அந்தக் கருவியால் பறக்க முடியும். என்பதை நம்ப மறுத்தனரே அவ்வாறே நீங்களும் உண்மையிலேயே நீங்கள் மிக உயர்ந்த விடயங்களுக்காக வடிவமைக்கப்படுகிறீர்கள் என்பதை நம்ப மறுக்கிறீர்கள்.

ஒரு சின்னக்கதை...

ஒரு சிறுமி பியானோ வாசிக்கக் கற்றுக் கொண்டிருந்தாள். அவள் ஆசிரியர் கொடுத்த பாடங்களுடன் போராடிக் கொண்டிருந்தாள். அவளருகில் அமர்ந்திருந்தவனோ பியானோ வாசிப்பதில் மிகுந்த தேர்ச்சி பெற்றவன். அவனாகவே ஒரு பாடலை வாசித்துக் கொண்டு இருந்தான். அந்தச் சிறுமி அவனிடம் சென்று சிறிது நேரம் அவன் வாசிப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தாள். இறுதியில் அவனிடம் கேட்டாள் ஐயா ஒருவேளை உங்களுக்கு என்னைவிட அதிகமான விரல்கள் இருக்கிறதோ?

(சிரிப்பு)



நாம் எப்பொழுதும் வேண்டிய அளவு அதிஷ்டசாலியாக இருப்பதில்லை என்று எண்ணுகிறோம். உண்மை என்னவெனில் நமக்குத் தேவையானதெல்லாம் ஏற்கனவே நம்மிடம் இருக்கிறது. அதை எவ்வாறு சரியாக உபயோகப்படுத்துவது என்பது மட்டுமே நமக்குத் தெரியவில்லை. நம்மில் பலர் நமது வாழ்க்கை முறை, திறமை ஆகியவற்றை ஒரு மாட்டு வண்டியைப் போலவோ அல்லது ஒரு டிராக்டரைப் போலவோ தான் உபயோகிக்கிறோம். அதை ஒரு ஆகாய விமானமாக மாற்றிவிட முடியும் என்பது நமக்குள் தெரிவதில்லை.

ஆன்மீகம் 19

பரமஹம்ஸ சுவாமி

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீர்... தண்ணீர்...

**“ தமிழகத்தில் முதலமைச்சர் செல்வி ஜெயல லிதாவின் ஆட்சியில் மழைநீர் சேகரிப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தி 50 வீதம் சேமித் ததுடன் மழை நீர் கடலுடன் சேராமல் நிலத்தடி நீராக மாற்றி சாதனை படைத்துள்ளார். எங்கள் வடக்கு மாகாண அரசு மழைநீர் சேக ரிப்புத் திட்டத்தை அறிமுகப்ப டுததுவது காலத் தின் தேவையாகும். இல்லை யேல் தண்ணீரப் பிச்சை எடுக்கும் நிலை நமக்கும் ஏற்படும். வடக்கு மாகாண அரசு இத்திட்டத்தை அறிமு கம் செய்யுமா? பொறுத் திருந்து பார்ப்பதற்கு இது நேரமல்ல... ”**

“ஒவ்வொரு மனிதனின் தேவையையும் பூர்த்தி செய்ய இந்த பூமியால் முடியும். ஆனால், மனிதர்களின் பேராசையைப் பூர்த்தி செய்ய இந்த பூமியால் முடியாது” என்றார் மகாத்மா காந்தி.


மனிதனின் பேராசையால் பூமிப் பந்து சூடாகி பக்க வாதத்தில் முடங்கிக் கொண்டி ருக்கிறது பருவநிலை. ஒரு காலத்தில் மாதம் மும்மாரி பொழிந்த மழை, மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை “அய்யோ பாவம்” என எட்டிப் பார்த்துவிட்டுப் போகிறது. நீர்நிலைகள் எல்லாம் நீரின்றி நிர்வாணமாகக் கிடக்கின்றன. “குளத்தில் குளிதத, ஆற்றில் ஆட்டம் போட்ட, கிணற்றில் குதித்து விளையாடிய கடைசி தலைமுறை நாம் தான்” என முகநூலில் பதிவிடுவதோடு முடிந்து விட்டதா நம் கடமை. அடுத்த தலைமுறை அனுபவிக்க வேண்டிய அத்தனை வளங்க ளையும் அழித்த தலைமுறையும் நாம்தான் என்பதை வசதியாக மறந்து போவது எந்த வகையில் நியாயம்?

ஏனைய வளங்களை யெல்லாம்கூட விட்டு விடுங்கள். உயிர் வாழ அடிப்படையான நீர்வளத்தை எப்படி சிதைத்திருக்கிறோம். எடுப்பது மட்டுமே நம் கடமை என ஆயிரம் அடிக்கு கீழே ஓடி ஒளியும் நிலத்தடி நீரைத் தேடிப் பிடித்து உறிஞ்சுகிறோமே... பதிலுக்கு நாமும் கொடுக்க வேண்டாமா? ஒருவருக்கு நாம் ஒன்று கொடுத்தால்தானே அவர் ஒன்று தருவார். மாறாக நாம் எதையும் கொடுக்காமல் அவரிடம் இருந்து வாங்கிக் கொண்டே இருந்தால் ஒரு கட்டத்தில் கொடுப்பதை நிறுத்துவதுடன் நம்முடனான உறவையும் முறித்துக் கொள்வார் என்பதுதானே யதார்த்தம். இதே நிலைதான் நிலத்தடி நீர் விடயத்திலும் நடந்து கொண்டிருக்கிறது.

இனியேனும் திருப்பிக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும். அதற்கான அருமையான வழிமுறைதான் மழைநீர் சேமிப்பு.

இதுவே காலம் கடந்த முயற்சிதான். என்றாலும், இப்போது இல்லையென்றால் இனி எப்போதும் இல்லை என்ற விளிம்பு நிலை முயற்சி. இது இயற்கை, மனிதனுக்கு அளித்திருக்கும் கடைசி வாய்ப்பு. இதை முறையாகப் பயன்படுத்தி மழைநீரை முறையாக அறுவடை செய்தால், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதோடு நமக்கான நீர்த் தேவையையும் சுலபமாகப் பூர்த்தி செய்துகொள்ள முடியும்.பெருநகரங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள், வணிக வளாகங்களைச் சுற்றி சீமெந்து தளங்கள் அமைத்து விடுவதால், பெய்யும் மழை முழுவதும் யாருக்கும் பயனில்லாமல் வீதிகளில் ஓடி, சாக்கடைகளில் கலந்து கடைசியாக கடலில் சங்கமிக்கிறது. இதையெல்லாம் தவிர்த்தாலே, கோடிக்கணக்கான லிற்றர் தண்ணீரை பூமிக்குள் அனுப்பி, நிலத்தடி நீரை செறிவூட்டம் செய்யலாம். இதற்கு அடுக்குமாடிக் கட்டடங்களை சுற்றி, 3 அடி ஆழம் 12 அங்குலம் விட்டம் கொண்ட துளைகளை அமைத்து, மணல் மற்றும் கூழாங்கற்கள் கொண்டு நிரப்பி, துளையிடப்பட்ட சீமெந்து சிலாப் கொண்டு மூடிவிட வேண்டும். ஒரு கிரவுண்ட் பரப்பில் கட்டப்பட்ட கட்டடத்தில், இதுபோன்று ஆறு குழிகளை அமைக்கலாம்.





**மழைநீர் சேகரிப்பால் ஏற்படும் பயன்கள்!**

- நிலத்தடி நீர்மட்டம் அதிகரிக்கும். கார அமிலத்தன்மை சமனடையும்.
- விளைநிலங்களில் மண் அரிப்பு தடுக்கப்படும். நிலத்தடி நீரை மேலே கொண்டு வரும். செலவு குறையும்.
- மண்ணில் ஈரப்பதம் காக்கப்படும். ஆங்காங்கே நீர் தேங்குவதால், ஏற்படும் நோய்கள் தடுக்கப்படும்.

**உடனடி மழைநீர் சேகரிப்பு!**

தனி வீடுகளில் வசிப்போர் வீட்டின் மேல் விழும் மழைநீரை குழாய்கள் மூலம் அறுவடை செய்யலாம். மழை பெய்யும் பொழுது திறந்தவெளியில் நான்கு மரக் கொம்புகளை நட்டு அதில் ஒரு வெள்ளை வேட்டியை கொஞ்சம் தளர்வாக நான்கு முனைகளிலும் கட்டிக் கொள்ள வேண்டும். வேட்டியின் மையத்தில் இரண்டு கிலோ எடையுள்ள கருங்கல் ஒன்றை வைக்க வேண்டும். இப்போது வேட்டியின் மையத்தில் புனல் போன்ற அமைப்பு உருவாகி இருக் கும். பெய்யும் மழைநீர் அந்தப் புனல் வழியாக கீழே வழியும். கீழே பாத்திரத்தை வைத்து நீரைச் சேக ரிக்கலாம்.

**காணும் இடமெல்லாம் மழைநீர் சேமிப்பு!**

தற்போது நாடு முழுவதும் தண்ணீர்ப்பஞ்சம். வோட்டர் ஏ.டி.எம். சென்டர்கள் வர ஆரம்பித்துவிட்டன. காலி குடங்களுடன், தவித்த தொண டைகளுடன் வீதிகளில் அலைகிறார்கள் மக்கள். இனி விழும் மழைநீரை ஒரு சொட்டு கூட வீணாக்காமல், பூமித் தாய்க்கு அர்ப்பணிக்க வேண்டும் என்கிற எண்ணம் நம அனைவருக்குள்ளும் வர வேண்டும். இது ஒரு மக்கள் இயக்கமாக மாற வேண்டும். ஊர்கள்தோறும் மழைநீர் சேகரிப்பு மன்றங்கள் உரு வாக வேண்டும், மக்களுடன் அரசும் கைகோர்த்து இந்தப் பணியை மேற்கொண்டால் இன்னும் சில ஆண்டுகளில் நிலத்தடி நீர்மட்டத்தைக் குறிப்பிட்ட அளவு உயர்த்தி விட முடியும்.

ஜூனியர் விகடன்

# அரசாங்கத்திற்கு அவசியம் இல்லை

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

மக்களின் வாழ்க்கைச் செலவு உயர்வினை குறைக்கவோ கட்டுப் படுத்தவோ அரசாங்கத்திற்கு எவ் வித அவசியமும் கிடையாது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஹப்புத்தளை தேர்தல் தொகுதி யில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் அவர் இதனைக் தெரிவித்தார்.

மாகாணசபை தேர்தல்களின் பின்னர் பொருட்களுக்கான விலை களை உயர்த்துவதனை அரசா ங்கம் வழமையாக்கிக் கொண்டு ள்ளது. மத்திய, வடமத்திய, தென் மற்றும் மேல் மாகாணசபைத் தேர்தல்களின் பின்னரும் வாழ்க் கைச் செலவு உயர்வடைந்துள் ளது.

மக்களின் வருமானம் அதிக ரிக்கப்படவில்லை. எனினும் பொரு ட்கள் சேவைகளுக்கான செலவு கள் பாரியளவில் உயர்வடைந் துள்ளன.

தேர்தலில் தோல்வியைத் தழுவக்கூடும் என்ற அச்சத்தினால் ஐக்கிய தேசியக் கட்சி தொடர்பில் அரசாங்கம் பிழையான பிர சாரங்களை மேற்கொண்டு வரு கின்றது.

எது எவ்வாறு இருப்பினும் ஐக் கிய தேசியக் கட்சியின் வெற்றியை எவராலும் தடுக்க முடியாது என ரணில் விக்ரமசிங்க தெரிவித்து ள்ளார். (இ)

# ஹோட்டலில் தங்குவோர் தகவல்களையும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவு திரட்டுகின்றது

ஹோட்டல்களில் தங்குவோரின் விபரங்களை புலனாய்வுப் பிரிவி னர் திரட்டி வருவதாகத் தெரிவிக்க ப்படுகிறது. ஹோட்டல்கள், விடுதிக ளில் தங்கியிருக்கும் உள்நாட்டுப் பிரஜை களின் பெயர் விபரங்கள், முகவரிகள், தங்கியிருந்த நாட்க ளின் எண்ணிக்கை, தங்கிய தினம் போன்ற விபரங்களை பொலிஸார் திரட்டி வருகின்றனர்.

மனைவி, பிள்ளைகளுடன் ஹோட் டல்களில் தங்கியிருப்போர் பற்றிய தகவல்களும் திரட்டப்பட்டு வருகின் றன. இது தொடர்பில் ஹோட்டல் மற்றும் விடுதி நிர்வாகங்களுக்கு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இந்த தகவல்கள் நாள்தோறும் பொலிஸாருக்கு வழங்கப்பட வேண் டும் எனவும், இந்த தகவல்கள் மாவட்ட புலனாய்வுப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

அந்த தகவல்களை தேசிய புலனாய்வுப் பிரிவினர் திரட்டுகின் றனர்.

எனினும், இவ்வாறு தகவல்கள் திரட்டப்படுவதனால் வாடிக்கையா ளர்களின் தனிப்பட்ட நடவடிக்கை க்கு குந்தகம் ஏற்பட்டு வருவதாக ஹோட்டல் விடுதி உரிமையாள ர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் வாடிக்கையாளர்க ளின் வரவு குறைவடையக் கூடிய அபாயம் காணப்படுகின்றது என வும் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை வெளிநாட்டு முத லீட்டாளர்களின் வருகையும் நாட் டுக்குள் முதலீட்டாளர்களின் எண் ணிக்கையும் குறைந்து வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டும் அதே வேளை இதற்கான முழுப் பொறுப் பினையும் அரசாங்கமே ஏற்க வேண்டும் எனவும் குற்றம் சாட்டியு ள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# விபத்தில் நால்வர் காயம்

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோவில் தேர்த் திரு விழாவில் கலந்து கொண்டு விட்டு ஆட்டோவில் சென்று கொண்டிருந்த 4 பேர் விபத்துக்குள்ளாகி காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஒல்லிக்குளம் பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கிழக்கு மாகாணம் நோக்கி இந்திய புலனாய்வு அமைப்புகளின் கவனம்

இந்திய புலனாய்வு அமைப்புகளின் கவனம் இலங்கையின் கிழக்கு மாகாணத்தை நோக்கி திரும்பியுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று பாதுகாப்பு துறை அதிகாரிகளை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கடந்த 10 மாத கால பகுதியில் பாகிஸ்தானிற்காக உளவு பார்த்த மூன்று இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் தமிழ் பேசும் முஸ்லிம்கள் தீவிரவாத மயப்படுத்தப்படுவது குறித்தும், பாக்கிஸ்தான் அவர்களை பயன்படுத்த முனைவது குறித்தும் புலனாய்வு அமைப்புகளின் கவனம் திரும்பியுள்ளது.

இந்திய அதிகாரிகளால் சமீபத்தில் கைது செய்யப்பட்டவர் ஒரு இலங்கை தமிழர் என்கின்ற போதிலும் ஏனைய இருவரும் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த தமிழ் பேசும் முஸ்லிம்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் இந்த பகுதியிலிருந்து இளைஞர்களை பாகிஸ்தானின் புலனாய்வு அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ் இந்தியாவிற்கு எதிரான நடவடிக்கைகளுக்காக திரட்டி வருவதாகவும், லக்ஸ்ஹர் இ.தொய்பா இலங்கையில் தளமொன்றை அமைத்துள்ளதாகவும் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் ஓரளவு செல்வாக்கு அந்த அமைப்பிற்கு உள்ளதாகவும் இந்திய புலனாய்வு அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

குறிப்பிட்ட பகுதி கடந்த சில தசாப்தங்களாக இன ரீதியான பதற்றங்களை சந்தித்துள்ளது, பாகிஸ்தான் இதனை பயன்படுத்துகின்றது, இந்தியாவிற்கு எதிரான நடவடிக்கைகளுக்காக, காத்மண்டு, டுபாய், பாங்கொக், கொழும்பு ஆகியவற்றை பாகிஸ்தான் தளமாக பயன்படுத்துகின்றது என அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தியாவின் அணு உலைகள் குறித்த தகவல்களை திரட்டவே கொழும்பை அதிகளவிற்கு பாகிஸ தான் பயன்படுத்துகின்றது,

அணுஉலைகள் பெருமளவில் தென்னிந்தியாவிலிருப்பதே இதற்குக் காரணம் என மேலும் தெரிவிக்கும் இந்திய பாதுகாப்பு வட்டாரங்கள் தற்போது தாக்குதல் திட்டங்களும் கொழும்பிலிருந்து தீட்டப்படுவது சமீபத்தைய கைதுகள் மூலமாக தெரியவந்துள்ளது எனவும் இது கவலையளிக்கும் விடயம் எனவும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)

## யானை தாக்கியதில் விவசாயி உயிரிழப்பு

(கொழும்பு)

காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி விவசாயியொருவர் உயிரிழந்த சம்பவமானது சேருநுவர பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலிங்கபுரம் கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கவிநாயகம் (வயது-56) என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

சடலம் சேருநுவர வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. மிகவும் பின்தங்கிய கிராமமான இந்தப் பகுதியில் அடிக்கடி யானையின் தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாக இப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (இ)

## 3 கிலோ தங்கத்துடன் ஐந்து பெண்கள் கைது

சட்டவிரோதமாக தங்கத்தை, கடத்தி வந்த 5 இலங்கை பெண்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த பெண்களிடம் இருந்து 10 தங்க பிஸ்கட்டுகள், 8 வளையல்கள், தங்கச் சங்கிலி, தங்க கைப் பட்டிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த பெண்களிடம் இருந்து மூன்று கிலோ கிராம் தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அவற்றின் பெறுமதி 20 மில்லியன் ரூபா என சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் தமது உடல் பகுதியில் மறைத்து இந்த தங்கத்தை சிங்கப்பூரில்'இருந்து இலங்கைக்கு கடத்தி வந்துள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (இ)

## இலங்.புகலிடக் கோரிக்கையாளர்களின் படகுப்பயணங்கள் தடுத்து நிறுத்தப்படும்

### முதலமைச்சர் தெரிவிப்பு


(கொழும்பு)

இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களின்படகுப்பயணங்களை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என இந்தியாவின் ஆந்திர பிரதேச துணை முதலமைச்சரும் உள்துறை அமைச்சருமான என் சினராஜப்பா தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பிரஜைகள் இந்திய கடற்பரப்பைப் பயன்படுத்தி அவுஸ் திரேலியாவிற்கு புகலிடம் தேடிச் செல்லும் முயற்சிகளை தடுக்க சகல முயற்சிகளும் எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

பிரகாசம் கடற்பரப்பைப் பயன் படுத்தி சட்டவிரோத ஆட்கடத்தல் காரர்கள், இலங்கையர்களை கடல வழியாக அவுஸ்திரேலியாவிற்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். கண்காணிப்பு பணிகளை வலுப் படுத்தும் நோக்கில் கரையோர பொலிஸ் பிரிவினரின் எண்ணிக்கையை உயர்த்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து அவுஸ் திரேலியா பயணிக்கும் புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், தென் இந்தியாவை இதற்கான மாற்று களமாக பயன் படுத்திக்கொள்ள இடமளிக்கக் கூடாது எனவும் அவுஸ்திரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.



அண்மையில் புதுச்சேரியிலிருந்து புறப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர் படகு தொடர்பான சர்ச்சை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

## சாப்பிட்டாலே உடம்பு நீலநிறமாக மாறிவிடும்

பிரித்தானியாவில் குழந்தை ஒன்று உணவு சாப்பிட்டால் அலர்ஜி உண்டாக கூடிய அரிய வகை நோயால் பாதிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவின் பெல்லிங் (Belling) நகரை சேர்ந்த மேக்ஸ் (Max Billingham age-2) என்ற குழந்தை food protein induced enterocolitis syndrome (FPIES) எனும் அரிய வகை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் கரட்(Carrot), உருளைக்கிழங்கு (Potato) மற்றும் வாழைப்பழத்தை (Banana) தவிர வேறு எந்த உணவை சாப்பிட்டாலும் மேக்ஸிற்கு அலர்ஜி ஏற்பட்டு விடும்.

இந்த நோய் இருப்பதை மேக்ஸ் பிறந்தவுடன் மருத்துவர்கள் அறிந்ததால், அதற்குரிய மருந்துகளையும், அலர்ஜி தரக்கூடிய உணவுகளையும் அவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.


உணவு புரதத்தால் ஏற்பட்ட நோயினால் தான் இவ்வாறு அலர்ஜி ஏற்படுவதாக மருத்துவர்கள் தரப்பில் கூறப்படுகிறது. (இ)

## பெண்களுக்கு ஏற்படும் அலர்ஜியும் அதற்கான நிரந்தரத் தீர்வுகளும்

Health Care

### மருத்துவ உலகம்

உங்கள் நலம் உங்கள் கைகளில்



வெயில் பட்டால் அலர்ஜி, தலை முடிக்கு சாயம் பூசினால் அலர்ஜி, நகை அணிந்தால் அலர்ஜி, செருப்பு அணிந்தால் அலர்ஜி என உடுத்தும் உடை முதல், உண்ணும் உணவு வரை அனைத்திலும் அலர்ஜி என பெண்களை அலற வைத்துக் கொண்டிருக்கிறது.

பெண்களுக்கு ஏற்படும் பொதுவான அலர்ஜி வகைகளும் அதிலிருந்து குணமா வதற்கான தீர்வுகள் குறித்து பார்க்கலாம்.

இன்றைய பெண்களுக்கு இளநரை தொல்லையை மறைக்க கலரிங், டை பயன்படுத்துகிறார்கள்.

அலர்ஜி உள்ளவர்கள் தங்கள் தலை முடிக்கு டை போட்டதுமே, வகிடு பகுதியில் அரிப்பு, சிவப்பாக பொரி பொரியாகத் தோன்றுதல் மாதிரியான அலர்ஜி அறிகுறிகள் தெரிய ஆரம்பித்துவிடும்.

இதனால் முகம் கருமை படர்ந்தது போல் இருக்கும்.

ஹெர்பல் ஹேர் டை என்ற பெயரில் விற்பனைக்கு வரும் பெரும்பாலான டைகளில் மூலிகைப் பொருட்கள் சேர்க்கப்படுவதே இல்லை.

அதுதான் பிரச்சினைக்கு காரணம். எனவே மூலிகைகள் சேர்க்கப்பட்டடையை அலசி ஆராய்ந்து வாங்குவது நல்லது.



அல்லது லெஸ் பொட்டென்ஷியல் ஹேர் டை என்கிற பெயரில் கிடைக்கும் டைகளை பயன்படுத்தலாம்.

எந்த டையானாலும் பயன்படுத்துவதற்கு முன்பு ஒரு முறை அலர்ஜி பற்றிய டெஸ்ட் செய்து கொள்வது அவசியம்.


நெற்றியில் வைத்துக் கொள்ளும் சாந்து, தரமற்ற குங்குமம் மற்றும் ஸ்டிக்கர் பொட்டில் உள்ள பசையினால் வரக்கூடிய அலர்ஜி இது.

இதனால் நெற்றிப் பகுதி தோல் உரிந்து சிவப்பாகத் தடித்துவிடும்.

நெற்றியில் பொட்டு வைக்கும் இடத்தில, வாஸ்லின் தடவி, அதன் மேலாக வீட்டில் உள்ள காபிப் பொடியை பொட்டு வடிவில், தொட்டு வைத்துக் கொள்ளலாம். இதனால் அலர்ஜி பிரச்சினை தீரும்.

முகம், கை, கால்களில் உள்ள முடியை நீக்குவதற்காக பல்வேறு கிரீம்களை பயன்படுத்துவதால் இந்த அலர்ஜி ஏற்படலாம்.

இந்த வகை கிரீம்களில் சேர்க்கப்படும் இரசாயனப் பொருட்களால் அலர்ஜி ஏற்பட்டு, தோலில் கோடு போட்டது போல் பொரி



பொரியாக சிவந்து தடித்துப் போகும்.

நாளடைவில், அந்த இடம் வெள்ளையாகவே மாறிவிடும். இதை முழுமையாக சரி செய்யவும் முடியாது.

எனவே உடனடியாக அந்த கிரீம்களை தவிர்த்துவிடுவது தான் நல்லது.

அழகழகாக மின்னும் சில நவீன வகை பான்சி விற்பனை நகைகளை அணியும்போது கை, கழுத்து, காது பகுதிகளில் அரிப்பு, கொப்பளங்கள் ஏற்படக்கூடும்.

இன்னும் சிலருக்கு தங்கம் கூட அலர்ஜியை ஏற்படுத்தும். இவர்கள் உலோகத்தால் ஆன ஆபர ணங்களைத் தவிர்த்து, மர வேலைப் பாடுகள் கொண்ட ஆபரணங்களையோ, தோலினால் செய்யப் பட்ட நகைகளையோ பயன்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னுமொரு அமெரிக்க கூலிப்படை!

...சிரியாவில் அமெரிக்காவால் ஊட்டி வளர்க்கப்பட்டு அதிபர் ஆசாத் அரசுக்கு எதிரான தாக்குதல்களை நடத்திவந்த "அல் நுஸ்ரா", "எஃப்.எஸ்.ஏ." முதலான சன்னி மார்க்க ஆயுதக் குழுக்களுடன் இணைந்தும், இதர குழுக்களை அணிதிரட்டியும் அல் பாக்தாதி தலைமையில் உருவானது தான் "இஸ்லாமிக் ஸ்டேட் ஆஃப் ஈராக் அண்டு சிரியா (ஐ.எஸ்.ஐ.எஸ்.)" எனப்படும்



இயக்கமாகும்.

சிரியாவில் ஆசாத் அரசுக்கு எதிரான பயங்கரவாதத் தாக்குதல்களைத் தொடுத்துவந்த இந்த இயக்கத்தினர் ஆயுதக் கொள்ளைகளிலும் வங்கிக் கொள்ளைகளிலும் ஈடுபட்டதோடு, சிரிய நாட்டின் அருங்காட்சியகத்திலிருந்த அரிய கலைபொருட்களைக் களவாடி விற்றும், தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் கட்டாய வரிவசூல் செய்தும் பணபலமும் ஆயுத பலமும் கொண்ட பயங்கரவாத இயக்கமாக வளர்ந்தனர்.



"ஐ.எஸ்.ஐ.எஸ்." என்ற பெயரில் இயங்கி வந்த இப்பயங்கரவாத இயக்கம்தான் இப்போது "ஐ.எஸ்." (இஸ்லாமிக் ஸ்டேட்) என்று பெயர் மாற்றம் செய்து கொண்டு, புதிய கிலாஃபத் அரசை நிறுவியுள்ளதாக அறிவித்துள்ளதோடு, அதன் தலைவரான அபுபக்கர் அல் பாக்தாதி, தன்னையே இந்த அரசின் கலீஃபாவாக நியமித்துக் கொண்டுள்ளார்.

ஷியா, சன்னி, சுஃபி என வேறுபட்ட இஸ்லாமிய மார்க்கங்கள் இருந்த போதிலும், வாஹாபி சன்னி மார்க்கம் மட்டும்தான் உண்மையான இஸ்லாமிய மார்க்கம் என்று கூறி, இதர இஸ்லாமிய மார்க்கத்தினரின் மசூதிகள் மீது குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தி அவற்றைத் தரைமட்டமாக்கியுள்ளனர்.

குர்து மொழி பேசும் யேசிடி எனும் பழங்குடியினக் குழுவினரது வழிபாட்டு முறையை பேய் வழிபாடு என்று சாடும் ஐ.எஸ். இயக்கத்தினர், ஈராக்கின் சிறுபான்மையினரான இப்பழங்குடி இனத்தவர் மீது தாக்குதல் தொடுத்து அவர்களைத் தமது ஆதிக்கத்திலுள்ள பிராந்தியத்திலிருந்து விரட்டியடித்து வருகின்றனர்.

மெக்காவின் காஃபாவில் உள்ள கருப்புக் கல்லை அகற்றாவிடில், அம்மசூதியைத் தகர்க்கப்போவதாக சவுதி அரேபியாவுக்கு எதிராகச் சவடால் அடித்து, தங்களை இஸ்லாத்துக்கு அத்தாரிட்டியாகக் காட்டிக் கொள்கின்றனர்.

யேசிடி, ஷாபக், சால்டியன் கிறித்துவர்கள், சிரிய கிறித்துவர்கள் முதலான மத, இனச் சிறுபான்மையினரும் ஷியா பிரிவு முஸ்லிம்களும் சன்னி மார்க்க இஸ்லாமியமதத்துக்கு மாற வேண்டும், அல்லது ஜெஷியா வரி கொடுக்க வேண்டுமென இப்பயங்கரவாதிகள் எச்சரித்து, அவர்கள்மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதலைத் தொடுத்து வருகின்றனர்.

இதனால் சிறுபான்மையின மக்கள் கொத்துக்கொத்தாகக் கொல்லப்பட்டு வருவதோடு, எஞ்சியோர் அகதிகளாக ஈராக்கிலிருந்து தப்பியோடுகின்றனர்.

இந்தியாவில் காலனிய ஆட்சிக் காலத்தில் இந்துவெறியர்களின் ஆசானாகிய சாவர்க்கர் இந்துத்துவ தேசியத்தை முன்வைத்து அணிதிரட்டியதைப் போலவே, இஸ்லாமிய சர்வதேசியம் எனும் கற்பனாவாத பிற்போக்கு முழக்கத்துடன், கிலாபத் எனப்படும் இஸ்லாமியத் தாயகத்தை உருவாக்கப் போவதாகக் கூறிக்கொண்டு இந்த சன்னி மார்க்கப் பிற்போக்குச் சக்திகள் சமூகத்தை இருண்ட காலத்துக்கு இழுத்துச் செல்கின்றன. மறுபுறம், இஸ்லாமிய பயங்கரவாதத்தைக் காட்டி அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் தனது மேலாதிக்கத் தாக்குதலுக்கு நியாயம் கற்பித்துக் கொள்கின்றன.

இப்படித்தான் கடந்த ஆண்டில் வட ஆப்பிரிக்காவிலுள்ள மாலி நாட்டிலும், அதற்கு முன்னர் ஆப்கானிலும் நடந்தது.

அமெரிக்க ஆதரவு பெற்ற மாலி நாட்டின் சர்வாதிகார அரசிடமிருந்து விடுதலை கோரி மாலியின் வடபகுதியிலுள்ள அசாவத் பிராந்தியத்தில் தூவாரக் இனக்குழுவினர் நீண்ட காலமாகப் போராடி வந்த நிலையில், அல்கய்தாவுடன் தொடர்புடைய இப்பகுதியிலுள்ள சன்னி மார்க்க இஸ்லாமிய தீவிரவாதிகள் இவர்களுடன் சேர்ந்து கொண்டு மாலி ராணுவத்துக்கு எதிரான தாக்குதல்களைத் தொடுத்து, 2013 இல் அசாவத் பிராந்தியத்தைத் தனிநாடாக அறிவித்தனர்.

இதர சன்னி தீவிரவாதக் குழுக்களை இணைத்துக் கொண்டு "இஸ்லாமிய மெஹ்ரப் அல்கய்தா குழு" என்ற பெயரில் திரண்ட இப்பயங்கரவாதிகள், இப்பகுதியில் சுஃபி மார்க்கத்தைப் பின்பற்றும் இஸ்லாமிய மக்களிடம் வாஹாபி சன்னி மார்க்கத்தைத் திணித்து ஷாரியத் சட்டத்தை ஏவி ஒடுக்கத் தொடங்கினர்.



இச்சன்னி மார்க்கப் பயங்கரவாதிகள் ஈராக்கிய ஐ.எஸ். இயக்கத்தினரைப் போலத் தனியொரு கிலாஃபத் ஆட்சியையும் கலீஃபாவையும் அறிவிக்கவில்லையே தவிர, இந்த நோக்கத்தோடுதான் இயங்கினர்.

இந்த இஸ்லாமிய பயங்கரவாதிகள், லிபியாவில் கடாபியின் ஆட்சியைக் கவிழ்க்க சி.ஐ.ஏ. வினால் பயன்படுத்திக் கொள்ளப்பட்டவர்கள்.

இப்பிற்போக்குச் சக்திகளை வளர்த்துவிட்டு பகடைக்காயாகப் பயன்படுத்திக் கொண்ட அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள், மாலியின் ஒருபகுதியை இப்பயங்கரவாதக் குழுவினர் தனிநாடாக அறிவித்ததும், இஸ்லாமிய தீவிரவாதத்தை முறியடிப்பது என்ற பெயரில் ஆக்கிரமிப்புப் போரைத் தொடுத்து அந்நாட்டைத் தனது மேலாதிக்கத்தின் கீழ் இருத்தி வைத்துள்ளன.

இதேபோலத்தான் இப்போது இஸ்லாமிய தீவிரவாதத்தை முறியடிப்பது என்ற பெயரில் ஐ.எஸ். இயக்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளின் மீது அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் ஆளில்லா போர் விமானங்கள் மூலம் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தி வருகின்றன.

குர்து இனக்குழுக்கள், ஷியா பிரிவு முஸ்லிம்கள் மற்றும் ஈராக்கிய பொம்மை அரசுப்படைகளுக்கு ஆயுதங்களை வழங்கி போர் வியூகங்களை வகுத்து வழிகாட்டும் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள், இதனைப் பயங்கரவாதத்துக்கு எதிரான அவசியமான நடவடிக்கையாகச் சித்தரித்து மேற்காசியப் பிராந்தியத்தில் தமது மேலாதிக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றன.

ஐ.எஸ். இயக்கத்தைப் போன்ற பிற்போக்கு சக்திகளைப் பற்றியும், பின்தங்கிய நாடுகளில் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டக் கடமைகளைப் பற்றியும் நீண்ட காலத்துக்கு முன்னரே லெனின் சுட்டிக் காட்டியுள்ளார்.

1920-ல் நடந்த கம்யூனிச அகிலத்தின் இரண்டாவது மாநாட்டில், பின்தங்கிய நாடுகளில் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டம் பற்றிய ஆய்வுக் கட்டுரையை முன்வைத்த லெனின், "மதகுருமார்களையும் செல்வாக்கு செலுத்தும் பிற்போக்கு மற்றும் மத்தியகால சக்திகளையும் எதிர்த்து பின்தங்கிய நாடுகளில் போராட்டம் நடத்துவது அவசியமாகும். இஸ்லாமிய சர்வதேசியம் மற்றும் இதைப் போன்ற போக்குகளை எதிர்த்து முறியடிக்க வேண்டும்.


நிலப்பிரபுக்கள், கான்கள், முல்லாக்கள் மற்றும் பிற சக்திகளின் நிலையை வலுப்படுத்தவே இத்தகைய போக்குகள் முயற்சிக்கின்றன" என்று உணர்த்தியுள்ளார்.

லெனின் எத்தகைய பிற்போக்குச் சக்திகளை எதிர்த்துப் போராட்டம் நடத்த வேண்டுமென வலியுறுத்தினோரோ, அத்தகைய பிற்போக்குச் சக்திகள் இன்று உலகின் பல நாடுகளில் வளர்ந்துள்ளதோடு, மத அடிப்படைவாத பிற்போக்குச் சக்திகளும் மதவெறி பயங்கரவாத இயக்கங்களும் ஆதிக்கம் செலுத்தும் போக்கு உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. இந்தப் பிற்போக்குச் சக்திகள் ஏகாதிபத்தியங்களுடன் கள்ளக் கூட்டு கொண்டவையாகவும் அவற்றின் கூலிப்படையாகவும் இருப்பதோடு, வரலாற்றைப் பின்னுக்கு இழுத்து சமூகத்தைக் காட்டுமிராண்டி நிலைக்குத் தள்ளவும் துடிக்கின்றன. அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் இத்தகைய பிற்போக்குச் சக்திகளைப் பயன்படுத்திக் கொண்டு தமது காலனியாதிக்கத்தையும் மேலாதிக்கத்தையும் நிலைநாட்டிக் கொள்கின்றன. எதிரெதிரானவையாகத் தோன்றினாலும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக உள்ள இத்தகைய ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் வரலாற்றைப் பின்னுக்கு இழுக்கும் இத்தகைய பிற்போக்கு சக்திகளுக்கு எதிரான உறுதியான விடாப்பிடியான போராட்டம்தான் இன்று அவசியமாகவுள்ளது.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருண் செல்வராஜன் கைதால் தமிழக மக்கள் மத்தியில் அச்சம்



(கொழும்பு)

இலங்கையரான அருண் செல்வராஜனின் கைது தமிழக மக்களின் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளதாக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் உளவுப் பிரிவின் சார்பில் உளவுப் பணிகளில் ஈடுபட்டதாகத் தெரிவித்து இலங்கைப் பிரஜையான அருண் செல்வராஜனை இந்திய தேசிய விசாரணை முகவர் நிறுவன அதிகாரிகள் கைது செய்திருந்தனர்.

இந்த கைது தமிழக மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக கருணாநிதி தெரிவித்துள்ளார்.

குறிப்பாக அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலங்களில் இவ்வாறான தீவிரவாத ஊடுருவல்கள் பதிவாகின்றமை வழமையானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சகீர் ஹுசெய்ன் மற்றும் தமீம் அன்சாரி என்ற இரண்டு இலங்கையர்கள் உளவுப் பணிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் கடந்த ஆண்டிலும் இந்த ஆண்டிலும் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தின் உத்தரவுகளுக்கு அமைய இந்த உளவாளிகள் செயற்பட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# பொதுபல சேனாவுக்கும் அரசிற்கும் தொடர்பில்லை

## கிழக்கு இராணுவத் தளபதி தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் பொதுபல சேனாவுக்கும் இடையில் எவ்வித மான தொடர்பும் இல்லை. அரசின் மீது முஸ்லிம் மக்கள் எந்தவித மான சந்தேகமோ, அச்சமோ கொள்ளத் தேவையில்லை என கிழக்கு மாகாண இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லால் பெரேரா தெரிவித்துள்ளார்.

திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள வறிய குடும்பத்துக்கு, இராணுவத்தினரின் உதவியுடன் நிரந்தர வீடொன்றை கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட அவர் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுபல சேனாவுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் தொடர்பு இருப்பதாக முஸ்லிம் மக்களிடம் ஒரு சந்தேகம் இருக்கின்றது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அது தொடர்பில் உங்கள் கருத்து என்ன? என்று அவர் கேள்வி எழுப்பியிருந்தார். அதற்கு பதிலளித்த கிழக்கு மாகாண இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லால் பெரேரா, இது தொடர்பிலான பல சந்தேகங்களுக்கு முஸ்லிம் மக்கள் தெளிவு பெறும் வகையில், அண்மையில் பாதுகாப்பு செயலாளர், ஊடகங்கள் மூலமாக, விரிவான விளக்கம் ஒன்றினை தெரியப்படுத்தியுள்ளார்.

எனவே, அரசாங்கம் மக்களின் பாதுகாப்பிலும் அபிவிருத்தி விடயங்களிலும் கரிசனையுடன் உள்ளது. பொய் பிரசாரங்களின் மூலம் முஸ்லிம் மக்கள் அரசாங்கம் மீது அச்சம் கொள்ளத் தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# கம்பஹாவில் எலிக்காய்ச்சல்; முதியவர் ஒருவர் மரணமானார்!

(கொழும்பு)

கம்பஹா மாவ்ட்டத்தில் மீண்டும் எலிக்காய்ச்சல் நோய் மிக வேகமாக பரவி வருவதாக மேல் மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கம்பஹா, மினுவாங்கொடை, மீரிகம, நீர்கொழும்பு, திவுலுப்பிட்டிய ஆகிய பிரதேசங்களிலேயே எலிக்காய்ச்சல் நோய் பல பேருக்கு தொற்றியிருப்பது தெரிய வந்துள்ளதாக சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எலிக்காய்ச்சல் காரணமாக நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் நீர்கொழும்பைச் சேர்ந்த 63 வயதுடைய நபரொருவர் கடந்த புதன்கிழமை உயிரிழந்துள்ளார்.

வாகனச்சாரதியான இவர் பாதணிகள் அணியாத நிலையில் எலிகளின் மலசலக் கழிவுகள் உள்ள இடங்களில் நடமாடியதாலேயே காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை எதுவும் பலனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ)

## துப்பாக்கிச் சூடு நடத்தியவர் உடன் கைதாக வேண்டும்

அளுத்கம பிரதேசத்தில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவத்தில் உயிரிழந்த இருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவரை கைது செய்யுமாறு களுத்துறை மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார். கடந்த ஜுன் மாதம் 15 ஆம் திகதி அளுத்கம பிரதேசத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் இரண்டு முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்த இருவரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியே கொல்லப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் சம்பவத்துடன் தொடர்புடையவரை உடனடியாக கைது செய்யுமாறு நீதவான் ஆயேஸா ஆப்தீன் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (இ)

# சட்டத்தரணிகள் இருவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுப்பு

அரசாங்கம் மற்றும் பாதுகாப்பு அமைச்சிற்கு எதிரான வழக்குகளில் ஆஜராகிய இலங்கையின் இரு முக்கிய மனிதவுரிமை சட்டத்தரணிகளான நாமல் ராஜபக்ஷ (ஜனாதிபதியின் மகன் அல்ல) மற்றும் மஞ்சுள பத்திராஜ ஆகியோருக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை களனி தொரன சந்தியில் உள்ள நாமல் ராஜபக்ஷவின் அலுவலகத்திற்கு தலைக்கவசம் அணிந்து முகத்தை முழுமையாக மூடியபடி இரு இனந்தெரியாத நபர்கள் சென்றுள்ளனர், அவர்களில் ஒருவரிடம் ஆயுதம் காணப்பட்டுள்ளது.

ராஜபக்ஷவை அலுவலகத்தின் உட்பகுதிக்கு இழுத்துச்சென்ற அவர்கள் தேவையற்ற வழக்குகளில் ஆஜரானால்அவரும் அவரது சகாவான மஞ்சுள பத்திரா ஜவும் கொல்லப்படுவார்கள் என எச்சரித்துள்ளனர். குறிப்பாக சர்ச்சைக்குரிய மதகுருதொடர்பான வழக்கில் ஆஜராக வேண்டாம் என எச்சரித்துள்ளனர்.

பின்னர் மோட்டார் சைக்கிளில் அவர்கள் தப்பிச்சென்றுள்ளனர். இது குறித்து பேலியகொட பொலிஸில முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் கொழும்பில் இடம்பெற்ற காணமற்போனோர் பெற்றோரின் கூட்டத்தை கும்பலொன்று குழப்ப முயன்ற சம்பவத்திற்கு பின்னர் மருதானை பொலிஸ் நிலையத்திற்குள் வைத்தே இவர்கள் மிரட்டப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (இ)

# இன்று ஒரு தகவல்

## புத்திக் கூர்மை

கத்தியைத் தீட்டாதே! புத்தியைத்தீட்டு என்று ஒரு பெரியவர் புத்தி சொன்னார்.

அதைக் கேட்ட ஒரு சின்னப்பையன் , அது எப்படி பெரியவரே, புத்தியைத் தீட்டுவது? கத்தியைத் தீட்டு என்றால் ஒரு கல்லில் கத்தியை தேய்க்கலாம். புத்தியைத் தீட்டு என்றால் தலையைக் கொண்டுபோய் தரையில் தேய்த்துக் கொண்டிருக்க முடியுமா? என்றான்.

பெரியவர் உடனே, இந்தப் பையனுக்கு புத்திக் கூர்மை குறைவு என்று உணர்ந்து கொண்டார்.

அது சரி, அறிவுக்கும் புத்திசாலித்தனத்துக்கும் என்ன வித்தியாசம்? இது ஒரு முக்கியமான கேள்வி. இதேகேள்வியை சோக்ரடீசிடம் அவருடைய சிஷ்யன் ஒருத்தன் கேட்டான். சோக்ரடீஸ் நிமிர்ந்து சிஷ்யனைப் பார்த்தார். அதற்குப் பின் சொன்னார்.

இதற்கு நான் பதில் சொல்கிறேன். அதற்கு முதல் நீ ஒரு காரியம் செய்ய வேண்டும்? என்றார். என்ன செய்ய வேண்டும்? என்று சொல்லுங்கள் என்றான்.

அதோ பார்! அங்கே வயதான பெரியவர் ஒருவர் உட்கார்ந்திருக்கிறார். நேராக அவரிடம் போ இங்கிருந்து அருகிலிருக்கும் கிராமத்துக்குப் போய்ச் சேர எவ்வளவு நேரமாகும்? என்று அவரிடம் கேட்டுக் கொண்டு வா என்றார் சோக்ரடீஸ்.

சரி என்று சொல்லிவிட்டு அந்தப் பெரியவரிடம் போனான் அவன். அவரிடம் பெரியவரே இங்கிருந்து பக்கத்திலுள்ள கிராமத்துக்குப் போய்ச்சேர எவ்வளவு நேரம் எடுக்கும்? என்று கேட்டான்.

பெரியவர் நிமிர்ந்து பார்த்தார். ஆனால் பதில் எதுவும் சொல்லவில்லை. இந்த சிஷ்யன் மறுபடியும் இந்தக் கேள்வியைக் கேட்டான். அப்பொழுதும் அவர் பதில் சொல்லவில்லை.

சரி, பெரியவர் ஒரு மாதிரியாக தெரிகிறார். புத்தி சுவாதீனம் இல்லாதவர் போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டு வந்த வழியிலேயே திரும்பி நடந்தான். சிறிது தூரம் வந்தவுடன் அந்தப் பெரியவர் இவனைக் கூப்பிட்டார்.

நீ இங்கிருந்து பக்கத்திலுள்ள கிராமத்துக்குப் போய்ச் சேர 5 நிமிடமாகும் என்றார். இப்பொழுது சிஷ்யன் அவரை ஒரு மாதிரியாகப் பார்த்தான். அதன்பின் யோசித்தான். பின் அவரிடமே கேட்டான்.

பெரியவரே இந்தப் பதிலை திரும்பிப் போகவிட்டு அதன் பின் கூப்பிட்டு சொல்கிறீர்களே என்றான்.

பெரியவர் சிரித்தார். அதற்குப்பின் ஏனப்பா... நீ எவ்வளவு வேகமாக நடக்கிறாய் என்பதைப் பார்க்காமல் எப்படி நீ கிராமத்துக்குப் போய்ச்சேரக் கூடிய நேரத்தைச் சொல்ல முடியும். அதனால் தான் உன்னை நடக்கவிட்டு வேகத்தைப் பார்த்து அதன்பின் நேரத்தைச் சொன்னேன் என்றார். சிஷ்யனால் பதிலெதுவும் சொல்ல முடியவில்லை. திரும்பி சோக்ரடீசிடம் வந்து நடந்ததைச் சொன்னான்.

அதற்குப் பெயர் தான் புத்திசாலித்தனம் என்றார் சோக்ரடீஸ். இந்தப் புத்திசாலித்தனம் எல்லோருக்கும் வர வேண்டும் என்பதற்காகத்தான் கத்தியைத் தீட்டாதே! புத்தியைத் தீட்டு என்று பெரியவர்களெல்லாம் புத்திமதி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் அதையெல்லாம் இந்தக் காலத்தில் யார் கேட்கிறார்கள்?

இந்தக்கால ஆசாமி ஒருத்தர் இன்னொருவரைப் பார்த்துக் கேட்டார். ஏங்க? ஒரு விமானம் இங்கிருந்து புறப்பட்டு 2 மணிநேரத்தில் மதுரைக்குப் போய் சேருகிறது. அப்படியானால் என்னுடைய வயதென்ன? என்றார்.

இது என்ன கேள்வி? இருந்தாலும் இதைக் கேட்டவுடன் அவர் பதில் சொன்னார்.

அப்படியானால் உங்களுடைய வயது இருபது என்றார். எப்படி இவ்வளவு கரெக்டா சொல்கிறீர்கள்? என்றார் இவர்.

வேறொன்றுமில்லை. எங்களுடைய பக்கத்து வீட்டில் முழுப் பைத்தியம் இருக்கிறது. அதனுடைய வயது 40 என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகளை


# வேட்டையாடுவோம்

## பிரிட்டன், அமெரிக்கா ஆவேசம்











ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளால், டேவிட் ஹெய்ன்ஸ் தலை துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமைக்கு பிரித்தானிய பிரதமர் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

தீவிரவாதிகளின் இந்த செயற்பாடானது மிகவும் கொடூரமான சம்பவம் என்று பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

கொலையாளிகளை நீதியின் முன்நிறுத்த பிரித்தானியா அதன் அனைதது சக்திகளையும் கொண்டு செயற்படும். இதற்கு காரணமானவர்களை தேடி தண்டிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் அவர் சூளுரைத்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக டேவிட் கமரூன் அமைச்சர்களுடன் அவசர ஆலோசனை கூட்டம் நடத்தவுள்ளார்.

இந்த சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, குற்றத்தில் ஈடுபட்டவர்களை தண்டிப்பதற்கான அனைத்து உதவிகளையும் அமெரிக்கா வழங்கும் என்று தெரிவித்துள்ளார்.

ஈராக் மற்றும் சிரியாவில் அல் கொய்தா தீவிரவாதிகளை விட கொடிய ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தி வருகிறது.

இதனையடுத்து இதற்கு பழிவாங்கும் விதமாக, சிரியாவில் பிணைக் கைதிகளாக பிடித்து வைத்திருந்த அமெரிக்க ஊடகவியலாளர் இருவரை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தலையை துண்டித்து கொடூரமாக படுகொலை செய்தனர்.


இந்நிலையில் தீவிரவாதிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்த அமெரிக்காவிற்கு ஆதரவு அளித்த பிரித்தானியாவை மிரட்டும் வகையில் அந்நாட்டை சேர்ந்த டேவிட் ஹெய்ன்ஸ் என்ற தொண்டு ஊழியரை. தீவிரவாதிகள் தலையை துண்டித்துக் கொலை செய்துள்ளனர்.

இது தொடர்பான காணொலி காட்சி இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த காணொலியில் அமெரிக்காவுடன், பிரித்தானியா இணைந்து செயற்பட்டால், மற்றுமொரு பிரித்தானியாவின் பிணைக் கதியான ஆலன் ஹென்னிங்கை கொலை செய்வோம் எனவும் தீவிரவாதிகள் மிரட்டியுள்ளனர். (இ)

# இந்தியப் பெருங்கடலினில் கடினமான பொருட்கள் மீட்பு

## மலேசிய விமானத்தினுடையதா எனச் சந்தேகம்



கடந்த மார்ச் மாதம் 8 ஆம் திகதி மலேசிய தலை நகரான கோலாலம்பூரிலிருந்து சீனத்தலை நகரான பீஜிங் நோக்கி சென்ற போது மலேசிய விமானம் மாயமானது.

மாயமான இந்த விமானத்தை தேடும் பணியில் ஈடுபட்டுள்ள அவுஸ்திரேலிய குழுவினர் தற்போது இந்தியப் பெருங்கடலில் கடினமான 58 பொருட்களை கண்டுபிடித்துள்ளனர். கடலில் கண்டுபிடிக்கப்பட்ட பாகங்கள் மாயமான விமானத்திற்கு உடையதுதானா என்பதை அறியும் வகையில் அப்பொருட்கள் ஆய்வுக்கு அனுப்பப்படவுள்ளதாக அந்நாட்டு போக்குவரத்து அமைச்சர் லியோ டியாங் லாய் கூறியுள்ளார்.

இந்த 58 பொருட்களுக்கும் இந்தியப் பெருங்கடலின் கடற்பரப்புக்கும் எவ்வித தொடர்புமில்லை, எனவேதான் இது மலேசிய விமானத்தின் பாகங்களாக இருக்கலாம் என்று பலத்த சந்தேகம் எழுந்துள்ளது.

இந்தியப்பெருங்கடல் பகுதியில் அவுஸ்திரேலியாவின் ஃபர்கோ டிஸ்கவரி ஷிப் நீண்ட காலமாக தேடுதல் வேட்டையை நடத்தி வருகிறது. அதற்கு உதவியாக மலேசியாவின் கோ ஃபீனிக்ஸ் எனும் கப்பலை தேடுதல் வேட்டைக்கு அனுப்ப அரசு முடிவு செய்துள்ளதாக லாய் தெரிவித்துள்ளார். சோனார் சர்வே மூலம் கடலின் ஆழத்தில் நீண்டதூரத்திற்கு வல்லுநர்கள் ஆய்வு நடத்தி வருகின்றனர்.

இந்த ஆய்வில் கடலின் ஆழத்தையும், அதன் தரைப்பரப்பின் அமைப்பு குறித்து தகவல் கிடைத்து வருவதாக அவுஸ்திரேலிய போக்குவரத்து பாதுகாப்பு நிறுவனம் கூறியுள்ளது. ஒருவழியாக மாயமான விமானம் குறித்த உண்மை நிலவரம் இன்னும் சில தினங்களில் கண்டிப்பாக தெரிய வரும் என அவுஸ்திரேலிய தேடுதல் குழுவினரும், மலேசிய அரசும் நம்பிக்கை தெரிவித்துள்ளன. (இ)




# தீவிரவாதிகளின் தலைவர் கொலை!

### பிரான்ஸிற்கு தொடர்பு

சோமாலியாவை சேர்ந்த தீவிரவாத இயக்கத்தின் தலைவரை கொன்றதில் பிரான்ஸ் நாட்டிற்கும் பங்கு உண்டு என புதிய தகவல்கள் வெளியாகியுள்ளது.

பிரான்ஸ் புலனாய்வுத்துறை மற்றும் ஜனாதிபதி பிரான்கஸ் ஆலாண்டே (Francois Hollande) ஆகியோர் சோமாலியாவை சேர்ந்த அல்- சகபாப் (al- Shabaab) என்ற தீவிரவாத இயக்கத்தின் தலைவரை கொல்ல அமெரிக்காவிற்கு உதவியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன .

சோமாலியா முழுவதும் பயங்கரவாதத்தில் ஈடுபட்டிருந்த இஸ்லாமிய இயக்கத்தின் தலைவரான அகமத் கொடேன் அமெரிக்காவால் விமானத்தாக்குதல் நடத்தி கொல்லப்பட்டார்.

உலகில் முன்னணி 8 தீவிரவாதிகளில் ஒருவரான அகமத் (Ahamed) கடந்த செப்டெம்பர் மாதம் கொலை செய்யப்பட்டார்.

அகமத் கடந்த 2009 ஆம் ஆண்டு பிரான்ஸை சேர்ந்த புலனாய்வு அதிகாரிகள் இரண்டு பேரை சிறை பிடித்து வைத்திருந்தார்.

இதில் டெனிஸ் அலக்ஸ் (Denis Allex) மீட்பு தாக்குதல் நடத்திய போது உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## கப்பல் மூழ்கியதில் இருவர் உயிரிழப்பு

மத்திய பிலிப்பைன்ஸில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக கடந்த சனிக்கிழமை கப்பலொன்று மூழ்கியதால் இருவர் உயிரிழந்துள்ளனர். இதேவேளை, இக்கப்பலில் பயணித்த குறைந்தபட்சம் 100 பேர் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், மஹலிகா II என்ற இக்கப்பலில் 84 பேர் இருந்துள்ளதாக பட்டியலிடப்பட்டிருந்தது. இதனால், இக்கப்பலில் பயணித்த எத்தனை பேர் காணாமற் போயுள்ளனர் என்பது தொடர்பில் அதிகாரிகளினால் சரியாகக் கூறமுடியவில்லை எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தெற்கு லெய்ட் மாகாணத்திலுள்ள லீலொன் துறைமுகத்திலிருந்து இக்கப்பல் புறப்பட்டிருந்தது. (இ)

# ஆண் மீது பெண் வல்லுறவு; அதிர்ச்சியில் அமெ. ஆண்கள்

ஆணொருவரை வல்லுறவுக்குட்படுத்திய பெண்ணை அமெரிக்க பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இச்சம்பவம் அமெரிக்காவில பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கா வோஷிங்டன், சீட்டில் நகரத்தை சேர்ந்த 26 வயதுடைய பெண்ணே இக்குற்றத்தை புரிந்துள்ளார்.

இவர், 31 வயது மதிக்கத்தக்க ஆணொருவரின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து ஆணின் கைகளை கட்டிபோட்டுவிட்டு, இக் குற்றத்தை புரிந்ததாக தெரிவிக்க ப்படுகின்றது.

ஆழ்ந்த உறக்கத்திலிருந்த குறித்த நபர், அதிகாலை 2 மணியளவில் திடீரென கண் விழித்துப் பார்த்த போது, தான் பெண்ணொரு வரால் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டிருப்பதை உணர்ந்துள்ளார்.

கடுங்கோபமடைந்த அந்நபர், அருகிலிருந்த பெண்ணை அடித்து பலவந்தமாக வெளியே துரத்தியதுடன், தான் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதாக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டையடுத்து,குறித்த பெண்ணை கைதுசெய்த பொலிஸார் அவரை மரபணு பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

தான் பைபோலார் எனும் மனநோயினால் பாதிக்கப்பட்டிருப்ப தாக அப்பெண் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நீந்தும் டைனோசர் கண்டுபிடிப்பு!

சஹாரா பாலைவனத்தில் பூமிக்கு அடியில் புதையுண்டிருந்த ஒன்பதரைகோடி ஆண்டுகள் பழமையான ஸ்பைனோசர் என்ற டைனோசரின் எலும்புக் கூடு, அவை நீரில் நீந்தும் திறனுடையவை என்பதை காட்டுகின்றன.

ஸ்பைனோசர் இதுவரை அறியப்பட்டதில் மிகப் பெரிய மாமிச பட்சிணியாகும்.

துடுப்பு போன்ற தட்டையான பாதங்களும், முதலையைப் போல முக அமைப்பையும் நீருக்குள் முழ்கியபடி இருக்க ஸ்பைனோசர்களுக்கு கை கொடுத்துள்ளது.

தற்போது சஹாரா பாலை வனத்தில் எடுக்கப்பட்டுள்ள எலும்புக் கூடு 7 அடி நீளமுள்ளது.




இதன் உடல் அமைப்பு தரையில் பயணித்த பிற டைனோசர்களைப் போல இல்லை என்றும், அதனால் இந்த வகை விலங்குகள் தங்கள் வாழ்நாளில் கணிசமான பகுதியை நீருக்குள் செலவிட்டிருக்கலாம் என்று தாம் எண்ணுவதாகவும் இந்த ஆய்வை வழிநட த்திய சிகாகோ பல்கலைக் கழகத்தின் நிசர் இப்ரஹிம் தெரிவித்துள்ளார்.

இந்த வகை டைனோசர்கள் தலை முதல் வால்நுனி வரை கணக்கிடுகையில் 50 அடி நீளம் வரை வளரக் கூடியவை. டிரெக்ஸ் வகை டைனோசர்களை விட இவை அளவில் பெரியவை.

இவற்றுக்கு நீந்தும் திறன் இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் சந்தேகித்து வந்திருந்தாலும் இப்போது கிடைத்த இந்த புதைபடிம எலும்புக் கூடு இவை நீந்தின என்பதை உறுதிப்படுத்த உதவியுள்ளது. (இ)

## தேவாலயத்தை தீக்கிரையாக்கிய பத்து வயதுள்ள இரு சிறுவர்கள்

சுவிட்சர்லாந்தில் உள்ள கத்தோலிக்க தேவாலயம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்திற்கு 10 வயதுக்கு உட்பட்ட இரண்டு சிறுவர்கள்தான் காரணம என்று தகவல்கள் வெளியாகியுள்ளது.

ஜெனீவா மண்டலத்தின் (Canton of Geneva) வெர்னியர் நகராட்சியில் (Vernier) உள்ள லிக்னன் (Lignon) குடியிருப்பு பகுதியில்அமைந்துள்ள தேவாலயத்தில கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் பயங்கர சேதம் ஏற்பட்டுள்ளது.

இதுபற்றி பொலிஸார் கூறுகையில், நணபகலில் ஏற்பட்ட அந்த தீ விபத்தில் தேவாலயம் முழுவதும் அழிந்துவிட்டது. ஒருவர் புகை மூட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ளார்.

தீ விபத்து நிகழ்ந்த சிலமணி நேரத்தில் சம்பவ இடத்திற்கு வந்த 50 அவசர சேவை தொழிலாளர்கள் தீயை அணைக்க போராடியுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

இதையடுத்து நடந்த உடனடி விசாரணையில், இந்த தீ விபத்தினை ஏற்படுத்தியது இரு சிறுவர்களாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஆனால் அந்த சிறுவர்களின் சரியான வயதை பொலிஸார் தெரிவிக்கவில்லை. மேலும், அவர்களுக்கு சிறு வயது என்பதால் அவர்கள் மீது குற்ற வழக்கு சுமத்தி தண்டனை எதுவும் வழங்கமுடியாது என்று தெரியவந்துள்ளது.

எனவே விசாரணையில் ஈடுபட்டவர்கள், பெற்றோர் முன்னிலையிலேயே அந்த சிறுவர்களை விசாரித்ததோடு அவர்களை எச்சரித்துவிட்டு வீட்டிற்கு அனுப்பியுள்ளனர். மேலும், தீ விபத்திற்கான காரணம் குறித்து விசாரணை தொடர்வதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

# நாய்க்கறி விருந்து வைத்து காதலியை பழி தீர்த்த காதலன்

அமெரிக்காவில் தன்னை நிராகரித்து சென்ற காதலிக்கு, அவளின் செல்ல நாயை கொன்று விருந்து வைத்துள்ளான் காதலன்.

அமெரிக்காவின் கலிபோர்னியா பகுதியைச் சேர்ந்த காதலர்கள், டேட்டிங் சென்ற போது, காதலன் அவளிடம் மிகவும் முரட்டுத்தனமாக நடந்து கொண்டுள்ளான்.

அவளை அடித்து, உதைத்து, கடித்துக் குதறி காயப்படுத்தியதால் பீதியடைந்த அந்தப் பெண் உன் சகவாசமே வேண்டாம் என்று அந்த காதலனை நிராகரித்துள்ளார்.

சில மாதங்களுக்குப் பின்னர், அந்தப் பெண்ணை கடந்த வாரம் சந்தித்த முன்னாள் காதலன், நடந்த தவ்றுக்கு மன்னித்து விடும் படியும், இனி அதுபோல் முரட்டுத்தனமாக நடந்து கொள்ள மாட்டேன் என்றும் உறுதியளித்துள்ளார்.

அவரது பேச்சை ஓரளவுக்கு நம்பி, மெல்ல அவருடன் பழக ஆரம்பித்த காதலிக்கு தனது வீட்டில் பெரிய விருந்து ஒன்றை அவர் அளித்துள்ளார்.

விருந்து முடிந்து வீட்டுக்குச் சென்ற சில நிமிடங்களுக்குள் காதலனின் கைப்பேசியில் இருந்து அவளுக்கு ஒரு மெஸேஜ் வந்தது.

கைப்பேசியை எடுத்து மெஸேஜைப் பார்த்த அவள் அதிர்ச்சியடைந்தாள். அவளது பொமேரியன் இன வளர்ப்பு நாயின் புகைப்படத்துடன் வந்த மெஸேஜில், 'நீ இப்போது என்னோடு மூக்குப் பிடிக்க சாப்பிட்டு விட்டு வந்தாயே.., அது உனது செல்ல வளர்ப்பு நாயின் கறிதான்.

உணவு எப்படி சுவையாக இருந்ததா? என்று கேள்வி எழுப்பிய அந்நபர், உன் வீட்டு வாசல் கதவருகே போய்ப் பார். உன் நாயின் கால்கள் கிடக்கும். எடுத்து சூப் வைத்து சாப்பிட்டு உடம்பையும், மனதையும் தேற்றிக் கொள் என்று கூறியுள்ளான்.

பதறியடித்து, வாசலுக்கு ஓடி வந்து பார்த்தபோது, அங்கே தனது செல்ல வளர்ப்பு நாயின் கால்கள் கிடப்பதைக் கண்டு கொதித்துப் போன அந்தப் பெண், இச்சம்பவம் தொடர்பாக பொலிஸில் புகார் அளித்துள்ளார். (இ)

# தானாக நகரும் மரணவெளி அமெரிக்காவினில் அதிசயம்



அமெரிக்காவின் ரேஸ் டிரெக் பிளாஸா என்னும் பிரதேசம் உலகப் பிரசித்தமானது, இதற்கு மரண வெளிஎன்று பெயர். ஏன் தெரியுமா? இங்கு கண் ணுக் கெட்டிய தூரம் வரை மனிதர்களோ உயிரினங்களோ, மரம் மட்டைகளோ கிடையாது. இந்த மர்ம பூமியில் கற்கள் தானாக நகர்ந்து செல்கின்றன.

நீண்ட காலமாக நிகழ்ந்து வரும் இந்த மர்மத்திற்கான காரணம் இது வரை கண்டுபிடிக்கப்படவில்லை.


இவை நகர்ந்து சென்ற அடையாளங்கள் தெளிவாகக் காணப்படுகின்றனவாம். இங்குள்ள கற்கள் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் முழு பிரதேசத்தையும் சுற்றி வருவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

சிலவேளை இரு கற்கள் ஒரே நேரத்தில் பயணத்தை ஆரம்பிக்கும். ரயில் பாதை போன்று அவை சுற்றி வருகின்றன.

சில வேளை அவற்றில் ஒரு கல் வலது பக்கமோ இடது பக்கமோ திரும்பி தனது பயணத்தை தனியாக தொடர்வதுண்டு. இவை பின்னோக்கி நகர்ந்த சந்தர்ப்பங்களும் இருக்கவே செய்கிறது. இந்த பரந்த நிலப்பரப்பிற்கு அருகில் இருக்கும் மலையில் இருந்து கற் துண்டுகள் உடைந்து விழுகின்றன. இவையே நகர்ந்து செல்வதாக கூறப்படுவதுண்டு, இந்த மர்ம பிரதேசம் குறித்து முதன் முதலில் 1948 இல் தகவல் வெளியானது. 1972-80 காலப் பகுதியில் பாரியளவிலான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன.




## 13,000 டொலருக்கு விற்பனையான நாய்



கனடாவில் இனக்கலப்பாளர் ஒருவரிடமிருந்து அழகான ஒரு நாய் 13 ஆயிரம் டொலர்களிற்கு விற்பனையாகியுள்ளது.

அமெரிக்காவை சேர்ந்த நடிகை மற்றும் சமூகத்தில் உயர்நிலையில் உள்ளவரும், பொழுது போக்காளருமான பரிஸ் ஹில்ரன் என்பவர் இதனை வாங்கியுள்ளார்.

Mr. Amazing என்ற பெயருடைய 5-மாத பொமரேனியனே இந்த விலைக்கு விற்கப்பட்டுள்ளது.

6 சென்ரிமீற்றர்கள் உயரமுடைய இந்த நாய் முழுமையாக வளரும் போது 2-இறாத்தல்கள் எடை மட்டுமே கொண்டிருக்கும்.

இத்தகைய இனங்களை கல்கரியை சேர்ந்த Joanne Pauze என்பவர் தென் கொரியாவிலிருந்து இறக்குமதி செய்து ஒவ்வொன்றும் 6 ஆயிரம் டொலர்கள்களிற்கும், 20 ஆயிரம் டொலர்களிற்கும் இடைப்பட்ட விலைகளில் விற்கின்றார்.

இந்த சிறிய இனம் நுண்ணிய தேநீர் கோப்பை பொமரேனியன் என பெயர்கொண்டதெனவும் கூறப்பட்டுள்ளது.

# குட்டிப் பெண்



உலகின் மிகச் சிறிய பெண்ணான ஜோதி இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலத்தில் வசித்து வாரு கிறார். 16 வயதான ஜோதி பார்ப்பதற்கு சிறிய குழந்தை போல் இருக்கிறார்.

ஜோதியின் 23 இஞ்சி உயரமும் 5 கிலோ எடையும் கொண்டவர் ஆவார். மற்ற அனைத்து பிள்ளைகளை போல ஜோதியும் பள்ளிக்கு சென்று வருகிறார். ஒரு நடிகையாக வேண்டும் என்பது அவரின் விருப்பமாம்.

2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஜோதி தனது 16 ஆவது அகவையைப் பூர்த்தி செய்த போது கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் உலகின் மிகச் சிறிய பெண்ணாக உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## உலகிலேயே மிகப்பெரிய கைகளுடன் வாழும் பெண்

தாய்லாந்து நாட்டில் பெண ஒருவர் உலகிலேயே மிகப் பெரிய கைகளுடன் வாழ்ந்து வருவது மிகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.



தாய்லாந்தின் சூரின் மாகாணத்தை சேர்ந்த சமக் சாமாம்(59) என்ற பெண்சுமார் 50 வருடங்களாக மிகப்பெரிய கைகளை வைத்து கொண்டு அவதிப்பட்டு வந்துள்ளார்.

இவருடைய கை 9.50 கிலோ என்பதால், எந்தவிதமான வேலைகளையும் செய்ய முடியாமல் சிரமத்திற்கு ஆளாகியுள்ளார்.

இந்த நோய்க்காக, சிறு வயதிலிருந்து பல சிகிச்சைகள் எடுத்தும் ஒன்றும் பலனளிக்கவில்லை.

இதற்கான ஒரே வழி இவரின் கையை துண்டிப்பது தான் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் அறியும் உரிமைச்சட்டம்

## சோனியா காந்தி, அமித்ஷாவுக்கு மத்திய தகவல் ஆணையம் நோட்டீஸ்

(புதுடில்லி)

கடந்த ஆண்டு சுபாஷ் அகர்வால் என்னும் சமூக ஆர்வலர் மத்திய தகவல் ஆணைத்திடம் கோரிக்கை ஒன்றை வைத்திருந்தார். அதில் அனைத்து அரசியல் கட்சிகளையும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கொண்டு வரவேண்டும் என்று அவர் கேட்டு கொண்டிருந்தார்.

இதையடுத்து காங்கிரஸ், பா.ஜனதா, தேசியவாத காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, பகுஜன் சமாஜ் ஆகிய 6 தேசிய கட்சிகளும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக மத்திய தகவல் ஆணையம் அறிவித்தது.

எனினும், இவற்றில் எந்த கட்சிகளும் மத்திய தகவல் ஆணையத்தின் முடிவை எதிர்த்து நீதிமன்றில் வழக்கு தொடரவில்லை. அதே நேரம் தகவல் ஆணையத்தின் உத்தரவுகளை பின்பற்றியதாகவும் தெரியவில்லை.

இதையடுத்து தகவல் ஆணையத்தின் உத்தரவுக்கு காங்கிரஸ், பா.ஜனதா உள்ளிட்ட அரசியல் கட்சிகள் கட்டுப்படவில்லை என்று சுபாஸ் அகர்வால் மத்திய தகவல் ஆணையத்திடம் புகார் செய்தார்.

இதன்பேரில் கடந்த பெப்ரவரி 7 மற்றும் மார்ச் மாதம் 25 ஆம் திகதிகளில் 6 தேசிய கட்சிகளுக்கும் இது குறித்து விரிவான விளக்கம் அளிக்கக்கோரி மத்திய தகவல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியது. இதற்கும் அரசியல் கட்சிகள் எந்த பதிலையும் தெரிவிக்கவில்லை. இதையடுத்து மத்திய தகவல் ஆணையம் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பா.ஜனதா தலைவர் அமித்ஷா உள்ளிட்ட 6 தேசிய கட்சிகளுக்கும் மீண்டும் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

அதில், "மத்திய தகவல் ஆணையம் 2005 ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் 18 ஆவது ஷரத்தின்படி 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3 ஆம் திகதி பிறப்பித்த உத்தரவுக்கு தாங்கள் கீழ்படியாதது குறித்து ஒரு விசாரணையை நடத்துவதற்கு நாங்கள் ஏன் உத்தரவிடக்கூடாது? என்பதற்கு 4 வார காலத்துக்குள் தாங்கள் பதில் அளிக்க வேண்டும். இந்த நோட்டீசுக்கு உரிய காலத்திற்குள் பதில் அளிக்காவிட்டால் இதையே வலுவான ஆதாரமாக கொண்டு, சட்டத்தின் 'அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கூறப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகள் 6 மாதத்துக்குள் தகவல் அறியும் உரிமை சட்டம் குறித்த விளக்கத்திற்கு பதில் அளிக்காவிட்டால் மத்திய தகவல் ஆணையம் இது பற்றி முடிவெடுக்க அதிகாரம் உண்டு என்று அண்மையில் டில்லி உயர் நீதிமன்றம் உத்தரவு விட்டது.

இதனையடுத்தே சோனியா காந்தி, அமித்ஷா உள்ளிட்டோருக்கு தகவல்ஆணையம்நோட்டீஸ்அனுப்பி இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## ஒன்றரை இலட்சம் பேர் காஷ்மீர் வெள்ளத்தில் தவிப்பு

காஷ்மீர் மாநிலத்தின் மேற்கு பகுதியில் 2 வாரங்களுக்கு முன்பு பெய்த வரலாறு காணாத மழை காரணமாக மிக பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. மழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் சுமார் 10 இலட்சம் பேர் சிக்கினார்கள்.

கிராமங்களை இணைக்கும் சுமார் 2550 வீதிகள் அரித்து செல்லப்பட்டும் 64 பாலங்கள் உடைந்தும் விட்டதால் மக்கள் மழைத் தண்ணீரில் தத்தளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஸ்ரீநகர், ஜம்மு, முப்வாரா, பாரமுல்லா, புல்வாமா, பூஞ்ச், குல்கம், ரஜோரி, ரீசி நகரங்கள் தண்ணீரில் மூழ்கின. ஜீலம் நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதால் ஸ்ரீநகருக்குள்ளும் நூற்றுக்கணக்கான கிராமங்களுக் குள்ளும் சுமார் 6 அடி உயரத்துக்கு தண்ணீர் புகுந்தது.

இதையடுத்து இராணுவம், பேரிடம் மீட்புக் குழு, பொலிஸார், அரசு அதிகாரிகள் ஒருங் கிணைந்து மக்களை மீட்கும் பணிகளில் ஈடு பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வரை சுமார் 2 இலட்சம் பேர் மீட்கப்பட்டனர். நேற்று முன்தினம் திடீரென மழை பெய்ததால் மீட்புப் பணிகளில் சற்று இடையூறு ஏற்பட்டது. நேற்று திங்கட்கிழமை 14 ஆவது நாளாக மீட்புப் பணி நடந்தது. வெள்ளம் பாதித்த பகுதிகளில் இன்னமும் சுமார் 1 1/2 இலட்சம் பேர் தவித்தப்படி உள்ளனர். அவர்களை ஓரிரு நாட்களில் மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை மீட் கப்பட்டவர்கள் 20 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (இ)





## மின்னல் தாக்குதல் ஐந்து பேர் பலி!

பீகார் மாவட்டத்தில் உள்ள பாங்கா மாவட்டத்தில் கனமழை பெய்து வந்த நிலையில் அங்கு மின்னல் தாக்கியதில் ஐந்து பேர் பலியானார்கள். நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தில் ஒரு பெண் உட்பட ஐவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்தனர்.

பாங்கா மாவட்டத்தின் துணை கோட்ட பொலிஸ் அதிகாரியான சசி ஷங்கர் இது குறித்து கூறுகையில், "பான்சி பொலிஸ்நிலைய எல்லைக் குட்பட்ட சுஜாபூர், ஹெச்லா, குரியாரி பகுதிகளில் மின்னல் தாக்கியதில் ரவீந்திர யாதவ், ஷெரிப் அன்சாரி மற்றும் சவிதா ஆகியோர் மரணமடைந்தனர்.

அதேபோல் மின்னல் தாக்கிய மற்றொரு சம்பவத்தில் பெல்ஹார் மற்றும் கர்ஹாரா பகுதியை சேர்ந்த மிலேஷ் தாக்கூர் மற்றும் சிபஸ்வான் ஆகிய இருவர் உயிரிழந்தனர். வெளிப்புற பகுதியில் வேலை செய்து கொண்டிருந்த அவர்கள் மீது மின்னல் தாக்கியதாக கூறப்படுகிறது. உயிரிழந்தவர்களின் உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. (இ)

# ஈழத்தமிழர்களுக்கு விரைவில் நல்லதொரு தீர்வு கிடைக்கும்



## ஆஸியில் இல. கணேசன் உரை

(சென்னை)

இலங்கையில் உள்ள ஈழத்து தமிழர்களுக்கு மிக விரைவில் மோடி தலைமையில் நல்லதொரு தீர்வு கிடைக்கும் என தான் நம்புவதாக அவுஸ்திரேலியாவில் இல. கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பாரதியின் நிகழ்வில் அரசியல் பேசுவது உகந்தது அல்ல எனத் தெரிவித்த அவர், பாரதியின் கவிதைகள் பாடல்களில் சொல்லப்பட்டது போல இலங்கையில் என்ன நடக்கும் என்பதை மிக தெளிவாக கூறியிருந்தார்.

பாரதியின் வரிகளிலே மிக தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. இலங்கை தீவில் நடைபெற்ற சம்பவங்கள், நடைபெறப் போகின்ற சம்பவங்கள் என பாரதி மிக நன்றாக அவரின் பாடல் வரிகளில் மிக தெட்டத் தெளிவாக கூறியிருக்கிறார்.

அதுபோன்று இலங்கையில் வாழும் எமது ஈழத் தமிழர்கள் வாழ்வில் மிக விரைவில் மாற்றங்கள் ஏற்படும்.

பிரதமர் மோடி தனது 30 வருட கால நண்பர், அவர் இந்த ஈழத் தமிழர்கள் விடயத்தை தனது கவனத்தில் வைத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் உள்ள தமிழர் பண்பாட்டு கழகம் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வுக்கு அவுஸ்திரேலியா வாழ் தமிழ் சிறுமியர்கள் பாரதியின் பாடல்களும் அவரின் கவிதைகள் என பல்வேறுபட்ட விடயங்களை மிகவும் சிறந்த முறையில் பங்கேற்று நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத மும்பை இளைஞர்கள் நாடு திரும்புகின்றனர்

(சென்னை)

இந்தியாவை சேர்ந்த ஏழை இஸ்லாமிய இளைஞர்கள் சிலர், ஈராக் மற்றும் சிரியாவின் சில பகுதிகளை பிடித்து வைத்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத இயக்கத்தில் சேர்ந்துள்ளதாக பரவலாக பேசப்பட்டு வந்தது.

இந்நிலையில் மும்பையில் உள்ள கல்யாண் பகுதியை சேர்ந்த நான்கு இளைஞர்களான ஆரிப் மஜித், ஷகின் டாங்கி, பகத் ஷெய்க் மற்றும் அமன் டாண்டேட ஆகியோர் ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கத்தில் சேர்ந்தது சில தினங்களுக்கு முன் தெரிய வந்தது. சுற்றுலா குழுவினருடன் ஈராக் சென்ற அவர்கள் திடீரென காணாமல் போனார்கள். பின்னர் தங்களது குடும்பத்தினரை தொடர்பு கொண்ட நான்கு இளைஞர்களும் தாங்கள் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத குழுவில் இணைந்துள்ளதாக தெரிவித்தனர்.

சில தினங்களுக்கு முன் இக் குழுவில் உள்ள ஆரிப் மஜித் சிரியாவில் நடைபெற்ற மோதலில் கொல்லப்பட்டதாக ஆரிப்பின் குடும்பத்தாரிடம் டாங்கி தெரிவித்துள்ளார். இந்நிலையில் எஞ்சியுள்ள மூவரும் நாடு திரும்பவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 6 ஆம் திகதி தனது தாயையும் சகோதரனையும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட டாங்கி இத்தகவலை தெரிவித்துள்ளார். ஆனால் வந்து சேருவதற்கான திகதியை அவர் குறிப்பிட்டு செல்லவில்லை.

இந்த மூன்று இளைஞர்களும் இந்தியா வில் எந்த வித குற்றச் செயல்களில் ஈடுபடாததால் அவர்கள் மீது எந்த விதத்திலும் நடவடிக்கை எடுக்க முடியாது என பொலிஸ் வட்டாரங்கள் கருத்து தெரிவித்தன. (இ)

# இலங்கை மீனவர்களுக்கு 29 வரை விளக்கமறியல்

தமிழக கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் இந்திய கடலோர காவல்படையினரால் கைதுசெய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 10 பேரையும் எதிர்வரும் 29 ஆம் திகதிவரை சிறைக்காவலில் வைக்க எழும்பூர் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார். சென்னையிலிருந்து வட கிழக்காக 12 கடல்மைல் தொலைவில் இவர்கள் மீன்பிடித்தனர் என்று கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைதான மீனவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவர்கள் மீது வழக்குப்பதிவு செய்த பொலிஸார் 10 பேரையும் நேற்று முன்தினம் இரவு எழும்பூர் பெருநகர நீதிமன்ற நீதிபதியின் வீட்டில் முற்படுத்தினர்.

இதன்போது மீனவர்கள் அனைவரையும் விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

இதன்படி அனைவரையும் விளக்க மறியலில் வைக்க நீதிபதி உத்தர விட்டார்.

இதன்படி அனைவரும் புழல் சிறையில் அடைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தென்னிலங்கையைச் சேர்ந்த ரவீந்திரகுமார (வயது 32), தம்பரா (வயது 41), இந்துலின் (வயது 22), சமந்த் (வயது 27), பலிங்கா (வயது 37), சமீஹ (வயது 32), நீல் (வயது 32), எசுருத்ஹ (வயது 32), தியாண்டா (வயது 42), குட்வின் (வயது 43) ஆகிய 10 பேரே விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மலையானது புயலுக்கு அஞ்சுவதில்லை.
அறிவாளிகள் புகழ்ச்சிக்கு அடிமையாக மாட்டார்கள்.
– கனோபஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஞானபூமிக்குப் பொருத்தமான பிரதமர் நரேந்திர மோடி

இந்தியா ஞானபூமி என்பதில் மாற்றுக் கருத்துக்கிடமில்லை. இந்த உலகில் போற்றப்படுகின்ற அத்தனை ஞானவான்களின் பிறப்பும் இந்தியாவிலேயே நடந்தது.

ஞானிகளின் பிறப்பும் புனித கங்கை ஆற்றின் ஓட்டமும் மிகப் பிரமாண்டமான புனித தலங்களின் இருப்பும் இந்திய தேசத்தை ஞானபூமி ஆக்கின எனலாம்.

இந்தியதேசத்தின் அரசியலில் கூட, தத்துவ ஞானிகளும் தர்மவான்களும் ஆட்சி செய்தனர். எதிர்த்தரப்பிற்கும் மதிப்பளிக்க வேண்டும் என்ற உயர்ந்த ஜனநாயகப் பண்பு அங்கிருப்பதன் காரணமாகவே உலகின் தலைசிறந்த ஜனநாயக நாடு என்ற பெருமையை இந்தியா தனதாக்கிக் கொண்டது.

எத்தனை இனங்கள்; எத்தனை மதங்கள்; எத்தனை மொழிகள்; எத்தனை மாநிலங்கள் என்ற பிரிவுகளிலும் இந்தியன் என்பதில் அங்கு ஏற்படக் கூடிய ஒற்றுமை உலகில் வேறெங்கணும் காண இயலாது எனலாம்.

இத்துணை பெருமை மிக்க இந்தியாவில் இப்போது இருக்கக் கூடிய பிரதமர் நரேந்திர மோடி நடந்து முடிந்த தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு மிகப்பெரும் சாதனை வெற்றியைப் பெற்றவர்.

உலக நாடுகளுடன் நல்லுறவைப் பேணுவதில் அவர் காட்டும் ஆர்வம் என்பதற்கு அப்பால், இந்திய தேசத்தை அபிவிருத்தியின் முதல் நாடாக மாற்றுவதில் அவர் வகுத்துள்ள திட்டங்கள் மிகப் பெறுமதியானவை.

அது மட்டுமன்றி, இலங்கைத் தமிழர்களின் விடயம் பற்றியும் அவர் நன்கு அறிந்து வைத்துள்ளமை, அண்டை நாட்டின் பிரதமருக்குரிய சிறப்புப் பண்பின் உன்னதத்தைக் காட்டுகிறது.

2009 ஆம் ஆண்டில் வன்னியில் நடந்த கொடும் யுத்தத்தில் ஈழத்தமிழர்கள் பட்ட பேரவலத்தை அவர் அறிந்திருந்தமையாலும் அப்போது இந்தியாவின் ஆட்சியில் இருந்த காங்கிரஸார் இலங்கைத் தமிழர்களுக்கு துரோகம் இழைத்தனர் என்ற உண்மையை உணர்ந்திருந்ததன் காரணமாகவும் அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார் என்று உணரமுடியும்.

அதேசமயம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனைச் சந்திப்பதற்கு ஆர்வம் கொண்டுள்ளதாகப் பிரதமர் மோடி தெரிவித்த கருத்து, ஈழத்தமிழ் மக்களுக்கு இந்தியா துணையாக இருக்கும் என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்கான சமிக்ஞை என்று பொருள் கொள்ள முடியும்.

இத்தகைய சிறப்பு மிக்க பிரதமர் மோடியின் பிறந்தநாள் நாளை 17ஆம் திகதி ஆகும். இது குறித்து பிரதமர் மோடி இந்திய தேசத்து மக்களிடம் ஒரு கோரிக்கையை விடுத்துள்ளார்.

எனது அன்பார்ந்த பாரதபூமியின் மக்களே! எனது பிறந்த தினத்தை எவரும் கொண்டாட வேண்டாம். எனது பிறந்த நாளை கொண்டாடவேண்டும் என நீங்கள் யாரேனும் விரும்பினால், அதற்காக நீங்கள் செலவிடக் கூடிய நிதியை, பல வழிகளாலும் பாதிப்படைந்துள்ள ஜம்மு காஷ்மீர் மக்களுக்கு கொடுங்கள் என்று அறிவித்துள்ளார்.

பிரதமராகப் பதவியேற்றதன் பின்னர் வருகின்ற முதல் பிறந்த நாள் கொண்டாட்டத்தை காஷ்மீர் மக்களுக்காக தியாகம் செய்யும் பிரதமர் மோடியின் பெருந்தன்மையை, எங்கள் அரசியல்வாதிகள் சிறிதளவேனும் அறிந்திருப்பது நல்லது.

ஒரு தலைவன் எப்படி வா ழவேண்டும் என்பதற்கு மோடி நல்ல உதாரணம்.

# அரசாங்கத்திற்கு இந்தியா ஆயுத உதவி வழங்கியது

## உண்மையை ஒப்புக்கொள்ளும் அமைச்சர் ஹெகலிய

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டாலும், இரண்டாம் நிலை தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் மறைந்து வாழ்ந்து வருகின்றனர் என்பது உண்மை தான் என்று ஊடகத்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் கைது செய்யப்பட்ட இலங்கையரான அருண் செல்வராஜன் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கி அவர்களை வளர்த்ததும் இந்தியாதான். விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கு அரசாங்கத்துக்கு ஆயுத உதவி வழங்கியதும் இந்தியாதான்.

அதே விடுதலைப் புலிகளின் ஒரு சிலர் இன்று பாகிஸ்தானுடன் சேர்ந்து இந்தியாவுக்கு எதிராகச் செயற்படுகின்றனர். இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கையரான அருண் செல்வராஜன் குறித்து இந்திய புலனாய்வு அதிகாரிகள் இலங்கைக்கு வந்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பு வழங்கும்.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் தீவிரவாத அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் ஆபத்துள்ளது.

விடுதலைப் புலிகளை மீள அணிதிரள அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்கமாட்டாது. அதேபோன்று இவ் விடயத்தில் இந்தியாவும் கவனத்துடன் இருக்க வேண்டும் என ஹெகலிய ரம்புகவெல மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## நுகேகொட கல்லூரி இன்று மூடப்படும்

நுகேகொடை சென்.ஜோன் கல்லூரியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட அதிபரை மீண்டும் இப்பாடசாலையிலேயே நியமிக்குமாறு வலியுறுத்தி மாணவர்களின் பெற்றோர்கள் நேற்று ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

இதனையடுத்தே, இப்பாடசாலையை இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் மூட கல்வித் திணைகளம் தீர்மானித்துள்ளது.

இடமாற்றம் செய்யப்பட்ட அதிபரையே மீண்டும் இப்பாடசாலையில் நியமிக்குமாறு, அப்பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் நேற்று மனுவொன்றும் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

## பள்ளிவாசல் மீது கைக்குண்டுத் தாக்குதல்

தம்புள்ளை ஹைரியா ஜும்ஆ பள்ளிவாசலின் மீது நேற்றுமுன்தினம் இரவு கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை 12.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பள்ளிவாசல் நிருவாக சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குறிப்பிட்ட நேரத்தில் இருவர் பள்ளிவாசலுக்குள் நுழைந்தமை சி.சி.டி.வி. கமராவில் பதிவாகியுள்ளது. குறித்த இருவரும் பள்ளிவாசலுக்கு காவலில் இருந்த பொலிஸாரிடம் அனுமதி பெற்றதன் பின்னர் பள்ளிவாசலுக்குள் நுழைவதும் பதிவாகியுள்ளது. இந்நிலையில் பள்ளிவாசலின் மிம்பருக்கு அருகாமையில் குறிப்பிட்ட கைக்குண்டு வெடிக்கச் செய்யப்பட்டுள்ளது என்றார்.

எனினும் குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார், பட்டாசு வெடிப்புச் சம்பவமே இடம்பெற்றதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## மனைவியின் தங்கையை துஷ்பிரயோகம் செய்த நபர்

ஆனமடுவ - பெரமாகுத்துவ பகுதியில் மனைவியை கட்டி வைத்துவிட்டு மனைவியின் தங்கையை பாலியல் துஷ்பிரயோகம் செய்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவத்தில் 14 வயதுடைய சிறுமியே பாதிக்கப்பட்டவராவார்.

தன்னை கட்டி வைத்துவிட்டு தங்கையை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக சந்தேக நபரின் மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இச்சம்பவத்தில் 28 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையே கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட இளைஞனுக்கு விளக்கமறியல்

51 வயதான பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த 23 வயது இளைஞர் ஒருவர் கல்முனையில் கடந்த சனிக்கிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கல்முனை பொலிஸ் பிரிவில் குவாரி வீதியில் இடம்பெற்றுள்ளது. பாதிக்கப்பட்ட பெண் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பாக கல்முனை பொலிஸ் நிலைய பெருங்குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பு அதிகாரி தகவல் தருகையில், கல்முனை குவாரி வீதியில் தனியாக வசித்துவந்த குறித்த பெண்ணின் வீட்டுக்குள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் அத்துமீறி உட்புகுந்த இளைஞன் அந்த பெண்ணை பாலியல் துஷ்பிரயோகம் செய்து விட்டு தப்பி சென்றுள்ளார். பாதிக்கப்பட்ட பெண் கல்முனை பொலிஸில் முறைப்பாடு செய்ததை அடுத்து பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சோமகுமார தலைமையில் சென்ற பொலிஸார் சந்தேகநபரை சனிக்கிழமை கைது செய்தனர். பொலிஸார் சந்தேகநபரை கல்முனை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த பதில் நீதிபதி எஸ்.பேரின்பராஜா சந்தேகநபரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (இ)

## குழந்தையை கடத்திய கிறீஸ்பேய்க்கு மறியல்


நான்கு வயது 3 மாதங்களேயான குழந்தை கடத்தலுடன் தொடர்புடையதாக கூறப்படும் இலேபெரும ஆராச்சிகே காமினி (வயது32) என்றழைக்கப்படும் கிறீஸ் பேயை எதிர்வரும் 24 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு குருநாகல் நீதவான் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

குருநாகல், கனேவத்தை, அம்பகொலவெவ பிரதேசத்தில் உள்ள வீட்டில் தூங்கிகொண்டிருந்த நான்கு வயது 3 மாதங்களேயான தமாரா கேஷானி பண்டார விஜேகோன் என்ற சிறுமி கடந்த 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை கடத்தப்பட்டதுடன் கடந்த வெள்ளிக்கிழமை 12 ஆம் திகதி மீட்கப்பட்டார்.

சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் பிரதான சந்தேகநபரின் சகோதரன் மற்றும் அவர்களுடைய தாய் ஆகிய இருவரையும் எதிர்வரும் 24ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### வலிமையான சிந்தனை




- சிந்தனைக்கும் வாக்குக்கும் எட்டாதவர் கடவுள். அவருக்கென தனியாக குணம் ஏதும் கிடையாது.
- எத்தனை பிறவி எடுத்தாலும் நமக்கு உற்ற துணையாக வரும் நல்ல நண்பன் நல்லொழுக்கம் மட்டுமே.
- மனக்கட்டுப்பாடு மகத்தான ஆற்றலை உண்டாக்குவதற்கு உற்ற துணையாக இருக்கும்.
- பலவீனத்திற்குரிய பரிகாரம் எப்போதும் வலிமையைக் குறித்து சிந்திப்பது தான்.
- மனிதன் தாழ்ந்த உண்மையில் இருந்து மேலான உண்மைக்கு பயணம் செய்து கொண்டிருக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாவட்ட ரீதியான கிரிக்கெட் போட்டி

# கே.சி.சி.சி.தொடர் வெற்றி




(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சன சமூக நிலையத்தின் ஏற்பாட்டில் வருடா வருடம் நடத்தப்படும் 30 பந்து பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் தொடர்ந்து. மூன்று போட்டிகளில் கொக்குவில் மத்திய சன சமூக நிலைய அணி வெற்றி பெற்றது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடைபெறும் இந்த சுற்றுப்போட்டியானது. கடந்த 7ஆம் திகதி முதல் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

**ஜெயரூபனின் சதத்தின் உதவியுடன் 10 இலக்குகளால் வெற்றி**

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி முதல் போட்டியில் நியூஸ்டார் விளையாட்டு கழக அணியுடன் மோதியது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கு நியூஸ்டார் அணி களமிறங்கியது.

நிதானமாக துடுப்பெடுத்தாடிய நியூஸ்டார் அணி 30 பந்துப்பரிமாற்றங்களை முழுமையாக எதிர்கொண்டு 9 இலக்குகளை இழந்து 179 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி, 23.3 பந்துப்பரிமாற்றங்களில் இலக்குகள் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் ஏ.ஜெயரூபன் ஆட்டமிழக்காமல் 108 (12 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக) பெற்றுக் கொடுத்தார்.

**4 இலக்குகளால் ஜொலிஸ் டார்ஸ் அணியை வீழ்த்தியது**

இரண்டாவது போட்டியில் ஜொலிஸ்டார்ஸ் அணியுடன் கடந்த சனிக்கிழமை மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்டார்ஸ் அணி 30 பந்து பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 226 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் எம்.மதுஷன் 68 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் கொக்குவில் அணி சார்பாக ஆர்.பவிதரன் 4 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் அணி, 26 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. எஸ்.வல்லவக்குமரன் 68 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தனர்.

**ராகுலனின் துடுப்பாட்டத்தால் வெற்றி**

மூன்றாவது போட்டியில் வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ட் அணியுடன் கொக்குவில் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் அணி 30 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்கு களை இழந்து 255 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. ஆர்.இராகு லன் 93, என்.உமாநாத் 53 ஓட்டங்களையும் பெற்றுக்கொ ண்டனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய, ஓல்கோல்ட் அணி 30 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 139 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. இதனால் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி 116 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (க)

## டுவிட்டரில் கலக்கும் டோனி மனைவி



டோனியின் மனைவி சாக்ஷி சிங். பிரபல ஆடை வடிவமைப்பாளரான சப்னா பவானியுடன் சேர்ந்து எடுத்த புகைப்படத்தை தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

இந்திய அணித்தலைவர் டோனி ஆடுகளத்தில் அதிரடியில் கலக்கினால், அவரது மனைவி சாக்ஷி சிங் இணைத்யதளத்தில் கலக்குவார்.

அப்படி கடந்த சனிக்கிழமை கலகலப்பாக இருந்தவர் பிரபல ஆடை வடிவமைப்பாளரான சப்னா பவானியை 'பிக் பாஸ்' என்ற ரியாலிட்டி ஷோவில் சந்தித்து புகைப்படம் எடுத்துள்ளார்.

அந்த புகைப்படத்தை டுவிட்டரில் "லவ்..லவ்..லவ்" என குறிப்பிட்டு பதிவு செய்துள்ளார் சாக்ஷி சிங்.

## இலங். பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டி

### யாழ்.வீரர்கள் பிரகாசிப்பு

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தடகள போட்டியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக அணிக்கு ஒரு முதலிடம் 2 இரண்டாமிடங்கள் மற்றும் 4 மூன்றாமிடங்கள் என்பன கிடைத்தன.

14 பல்கலைக்கழகங்களை சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்குபற்றிய பல்கலைக்கழகங்க ளுக்கு இடையிலான விளையாட்டு போட்டியானது கடந்த 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச






விளையாட்டு அரங் கில் நடைபெற்றது.

இதில், பெண்களுக்கான ஈட்டி எறிதலில் எஸ்.தாரணி முதலாம் இடத்தை பெற்றார்.

100 மீற்றர் மற்றும் 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டங்களில் எஸ்.ஜெயரஞ்சினி இரண்டாம் இடத்தையும், உயரம் பாய்தலில் ஜி.துஸ்யந்தி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.





ஆண்களுக்கான போட்டியில் மூன்று மூன்றாமிடங்கள் கிடைத்தன. ரி.பிரசன்னா தட்டெறிதல் போட்டியிலும், ரி.கபிலன் 110 மீற்றர் தடை தாண்டல் போட்டியிலும், ஏ.ஜே.எட்வின் ஜோசப் 400 மீற்றர் தடைதாண்டல் போட்டியிலும் மூன்றாமிடங்களை பெற்றுக் கொண்டனர்.

யாழ். பல்கலைக்கழக தடகள ஆண்கள் அணியின் முகாமையாளராக ஜி.டி.மதியழகன், பெண்கள் அணியின் முகாமையாளராக திருமதி. ஜெ.சரவணபவஐயர் ஆகியோரும் பயிற்றுநராக செல்வி. இ.அருளம்பலமும் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## மேற்கிந்தியத் தீவுகளின் இந்தியப் பயணத்தில் மாற்றம்

இந்தியா, மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதும் தொடர் குறித்து, மாற்றப்பட்ட புதிய அட்டவணை வெளியானது.இது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரிய அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

முன்னதாக, இருபது-20 போட்டி டில்லியில் நடைபெறுவதாக இருந்தது. அதற்கு பதிலாக, இரண்டாவது ஒருநாள் போட்டி டில்லியில் ஒக்டோபர் 11 இல் நடைபெறும். இருபது-20 ஆட்டம் கட்டக்கில் ஒக்டோபர் 22இல் நடைபெறும்.

கொல்கத்தாவில் ஒக்டோபர் 17இல் நான்காவது ஒருநாள் போட்டி நடைபெறுவதாக இருந்தது. அதற்கு பதிலாக ஐந்தாவது ஒருநாள் போட்டி ஒக்டோபர் 20இல் கொல்கத்தாவில் நடைபெறும்.

இந்த சுற்றுப் பயணத்தில் இரண்டு பயிற்சி போட்டி, 5 ஒருநாள் போட்டி, ஒரு இருபது-20 போட்டி, ஒரு முதல்தர போட்டி மற்றும் மூன்று டெஸ்ட் போட்டிகளில் மேற்கிந்தியத் தீவுகள் அணி பங்கேற்கிறது.

மாற்றம் செய்யப்பட்ட சுற்றுப்பயண விபரம்:

ஒக்டோபர் 3: பயிற்சி போட்டி (மும்பை)
ஒக்டோபர் 5: பயிற்சி போட்டி (மும்பை)
ஒக்டோபர் 8: முதல் ஒருநாள் போட்டி, கொச்சி.
ஒக்டோபர் 11: இரண்டாவது ஒருநாள் போட்டி, டில்லி
ஒக்டோபர் 14: மூன்றாவது ஒருநாள் போட்டி, விசாகப்பட்டினம்
ஒக்டோபர் 17: நான்காவது ஒருநாள் போட்டி, தர்மசாலா
ஒக்டோபர் 20: ஐந்தாவது ஒருநாள் போட்டி, கொல்கத்தா
ஒக்டோபர் 22: இருபது ஓவர் போட்டி, கட்டாக்
ஒக்டோபர் 25-27: முதல்தர போட்டி - கிரிக்கெட் வாரியத் தலைவர் லெவன் அணியுடன், கான்பூர்
ஒக்டோபர் 30- நவம்பர் 3: முதல் டெஸ்ட், ஐதராபாத்
நவம்பர் 7- நவம்பர் 11: இரண்டாவது டெஸ்ட், பெங்களூர்
நவம்பர் 15- நவம்பர் 19: மூன்றாவது டெஸ்ட், ஆமதாபாத் (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அஜ்மல் தடை சரியானது ஆஸி பயிற்சியாளர் லீமன்



பாகிஸ்தான் சுழல்பந்து வீச்சாளர் சயீட் அஜ்மலுக்கு தடை விதித்தது வரவேற்கத்தக்கது என அவுஸ்திரேலிய பயிற்சியாளர் டேரன் லீமன் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணி அடுத்த மாதம் பாகிஸ்தானுடன் டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரில் மோத இருக்கிறது.

இந்நிலையில் விதிமுறைக்கு புறம்பாக பந்து வீசுவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் சயீத் அஜ்மலுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை தடைவிதித்தது.

இதற்கு வரவேற்பு தெரிவித்த அவுஸ்திரேலிய பயிற்சியாளர் டரன் லீமன் கூறுகையில், நீங்கள் விதிமுறைக்குட்பட்டு பந்து வீசினால் பிரச்சினை இருக்காது.

இல்லாவிட்டால் உங்களது பந்து வீச்சு கவனிக்கப்படும். அதன் அடிப்படையில் முடிவு எடுப்பார்கள். அஜ்மலின் விடயத்திலும் அதுதான் நடந்திருக்கிறது. எனவே இது விளையாட்டுக்கு நல்ல விடயமாக உள்ளது எனக் கூறியுள்ளார். (க)

# இந்தியா இமாலய வெற்றி



ஆசிய விளையாட்டின் முதல் லீக் போட்டியில் இந்திய மகளிர் கால பந்து அணி, மாலைதீவை 15:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இமாலய வெற்றி பெற்றது.

தென் கொரியாவின் இன்ச்சியானில் ஆசிய விளையாட்டு போட்டி வரும் 19ல் தொடங்குகிறது. ஆனால் இதற்கு முன்னதாக கால்பந்து லீக் சுற்று நடக்கிறது.

இதில் மகளிர் 'ஏ' பிரிவின் முதல் லீக் போட்டியில் இந்திய அணி, மாலைதீவை எதிர் கொண்டது.

தொடக்கம் முதலே.இந்திய அணி ஆதிக்கம் செலுத்தி அசத்தியது. ஆட்டத்தின் 5-வது நிமிடத்தில் அணித்தலைவர் பெம்பெமிடமிருந்து பெற்ற பந்தை சஸ்மிதா, கோலாக மாற்றினார்.

இதன் பின்னர் கோல் மழை பொழிந்த இந்திய வீராங்கனைகளை, எதிரணியால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆட்டத்தின் முதல் பாதி முடிவில் இந்தியா 9-0 என முன்னிலை பெற்றது.

பின்னர் தொடங்கிய இரண்டாவது பாதியிலும் இந்திய வீராங்கனைகளின் அபார ஆட்டம் தொடர்ந்தது. அதாவது எதிரணியின் பெனால்டி ஏரியாவில் முகாமிட்டு கோல் மழை பொழிந்து கொண்டே இருந்தனர்.

இதில், சஸ்மிதா, கமலாதேவி ஆகியோர் 'ஹட்ரிக்' சாதனை நிகழ்த்தியும் தீராத ஆசையால் இருவரும் தலா 5 கோல் அடித்து மிரட்டியெடுத்தனர்.

பாலாதேவி 2, பெம்பெம், பரமேஸ்வரி, ஆஷா தலா ஒரு கோல் அடித்தனர். முடிவில், இந்திய அணி 15:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதன்மூலம் காலிறுதி வாய்ப்பை உறுதி செய்தது. இந்திய அணி அடுத்த போட்டியில் தென் கொரியா (17-ம் திகதி), தாய்லாந்து (19-ம் திகதி) அணிகளை சந்திக்க உள்ளது.(க)




# நோர்வே தூதுவர் கிளி.விஜயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக்கு நேற்று திங்கட்கிழமை விஜயம் செய்த இலங்கைக்கான நோர்வே தூதுவர் யு.என்.டி.பி. நிறுவனத்தினால் நோர்வே அரசின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்களைப் பார்வையிட்டதுடன் அதன் முன்னேற்றங்கள் பற்றியும் கலந்துரையாடினார்.

முழங்காவில் பிரதேசத்தில் நோர்வே அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு வரும் பால் சேகரிப்பு நிலையம், கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தில் நோர்வே அரசின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வெல்ல உற்பத்தி தொழிற்சாலை ஆகியவற்றையும் தூதுவர் சென்று பார்வையிட்டார்.

இன்று செவ்வாய்கிழமை காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரனை நோர்வே தூதுவர் சந்தித்துப் பேசவுள்ளார். (எ-11)

# மக்களின் காணிகளை இராணுவத்துக்குக் கொடோம்

## முதலமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது மக்களுடைய காணிகளில் இராணுவத்தின்ர் இருப்பதற்கோ அவற்றை எடுப்பதற்கோ ஒரு போதும் அனுமதிக்க முடியாது. எனவே விரைந்து செயற்பட வேணடும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் வடக்கு மாகாண கடற்றொழில் இணையம் ஆகியவற்றிடம தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கடற்றொழில் இணையம் மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் ஆகியன இணைந்து நேற்று பிற்பகல் 3 மணியளவில் வடக்கு மாகாண முதலமைச்சரை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்து பேச்சுக்களை நடத்தியதுடன் 7 அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றினையும் அவரிடம் கையளித்திருந்தனர்.

அதன்போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்ததாக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் வடக்கு -கிழக்கு இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட பகுதி மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் மற்றும் மீள்குடியேற்றம் என்பனவற்றை மையப்படுத்தி 7 அம்சக் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றினை முதலமைச்சரிடம் கையளித்து பேச்சுக்களை மேற்கொண்டிருந்தோம்.

குறித்த மகஜரில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் கடற்றொழிலாளர்களது பிரச்சினைகளை உள்ளடக்கியதாக அமைவு பெற்றுள்ளதுடன் முக்கிய விடயமாக மீள்குடியேற்றமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும் கடற்றொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இதனைக் கருத்திற்கொண்டு முதலமைச்சரும் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சரும் அவர்களது பொருளாதாரத்தினை அபிவிருத்தியடைவதற்கு நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என்றும் கோரியுள்ளோம்.

அத்துடன் சில காரணிகளையும் முன்வைத்துள்ளோம்.

01.இந்திய இழுவைப்படகினால் வடபுலத்து மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு நிரந்தர தீர்வைப பெற்றுக் கொடுக்கவும்.

02.வட புலத்து மீனவர்களை ஒன்றிணைத்து பொது செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு உதவுதல்.

03.சட்ட விரோத மீன்பிடி முறைகளை முழுமையாக தடை செய்ய துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

04.தென்னிலங்கை மீனவர்களது வருகையால் வடபுலத்து மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களைக் குறைக்க நடவடிக்கை எடுத்தல்.

05.வலி.வடக்கு மக்களது பிரச்சினையை மிகவும் முக்கிய பிரச்சினையாக கொண்டு அவர்களை சொந்த இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுத்தல்.

06.மீனவ சமூகம் சார்ந்த பெண் தலைமைத்துவ குடும்பங்கள் முகம் கொடுத்து வரும் பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல்.

07.வடக்கு மாகாண கடற்றொழிலாளர்களது இணையம் என்ற ரீதியில் மாகாண மட்ட மீனவர்களின் பிரச்சினையை ஆராயும் குழுவில் எமது அமைப்பையும் இணைத்து கொள்ள நடவேடிக்கை எடுத்தல்.

போன்ற கோரிக்கைகளை முன்வைத்து சுமார் ஒரு மணித்தியாலம வரை கலந்துரையாடினோம். எமக்கு சாதகமான பதிலையே முதலமைச்சர் வழங்கியிருந்தார். (எ-11)

# மரண அறிவித்தல்

## திருமதி இராஜலோசனா தயசீலன்

(ஆசிரியை-யா/நீர்வேலி சி.சி.த.க பாடசாலை)



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜலோசனா தயசீலன் (ஆசிரியை யா/நீர்வேலி சி.சி.த.க பாடசாலை) நேற்று (15.09.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பூரணானந்தசிவம் தவமணி தம்பதிகளின் அன்புமகளும்விநாயகமூர்த்தி தவமணி தேவியின் அன்பு மருமகளும் தயசீலன் (ஆசிரியர்-யா/மகாஜனக் கல்லூரி ஆவரங்கால்) அவர்களின் ஆருயிர் மனைவியும் அபினா (மாணவி தரம் 2-யா/புனித ஜோன்பொஸ்கோ பாடசாலை), அனுஹா (மாணவி-பிறிட்டிஸ் பிஸ்னஸ் கல்லூரி-கோப்பாய்), ஆரூரன் ஆகியோரின் பாசமிகு தாயும், இராஜரூபன் (நோர்வே), இராஜமோகனா (பிரான்ஸ்), காலஞ்சென்ற இராஜமோகன், ஐங்கரன் (லண்டன்), Dr.இராஜவதனா (கொழும்பு), இராஜவதனன் (பின்லாந்து), கார்த்திகா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கலைவாணி, இந்திரன், கஸ்தூரி, ஜெயராம், இந்திரபவானி, அருந்தவநாதன், கிருஸ்ணபவானி, காலஞ்சென்ற குகதாஸ், கலாபவானி-குணரத்திரம், சத்தியசீலன், மங்கையற்கரசி, புனிதபவானி, காலஞ்சென்ற உதயச்சந்திரன், மோகனசீலன்-சுஜிதா, புஸ்பபவானி-உதயகுமார், ஜெயபவானி (கனடா)-ரவிச்சந்திரன், பிரமிளா (கனடா)-உருத்திரேஸ்வரன் ஆகியோர் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.09.2014) காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நீர்வேலி தெற்கு, நீர்வேலி.** (7610) **தகவல்:-குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறி விழு...

கண்டிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள வளைவு ஒன்றில் வேகமாக திரும்பியுள்ளது. இதன்போது முன்வாயில் பக்கமாக நின்ற நடத்துநர் தவறி கீழே விழுந்துள்ளார்.

இதன்போது அவரின் மீது பஸ்ஸின் சில்லு ஏறியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இவ் விபத்துச் சம்பவத்தில் வவுனியா கிச்சிராபுரத்தைச் சேர்ந்த சி.தர்சன் (வயது-20) என்பரே உயிரிழந்தவராவர்.

இவரது சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டதுடன் இவ்விபத்துத் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஏ-11-15-250)

## நேபாள...

ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை காத்மண்டுவில் நடைபெறவுள்ள 18-வது தெற்காசிய ஒத்துழைப்பு நாடுகளின் தலைவர்களின் அமர்வுக்காக உத்தியோகபூர்வ அழைப்பை விடுப்பதற்காகவே அவர் இலங்கை வருகிறார்.

நேபாள பிரதமர் சுசில் கொய்ராலாவின் விசேட பிரதிநிதியாகவே பகதூர் இலங்கைக்கு விஜயம செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## ஜனாதிபதி...

அமெரிக்கா செல்லவுள்ளார்.

மேலும் 24-ம் திகதி நடைபெறவுள்ள இப்பொதுக்கூட்டத்தில் உலகத் தலைவர்கள் மத்தியில் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்றுவார்.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் வெளிவிவகார அமைச்சின் கணகாணிப்பு அமைச்சர் சஜின் டி வாஸ் குணவரதன ஆகியோரும் ஜனாதிபதியுடன செல்லவுள்ளனர்.

இதேவேளை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் ஜனாதிபதிக்கு முன்னரே செப்ரெம்பர் 19-ம் திகதி நியூயோர்க் செல்லவுள்ளார். (எ-11)

## விடுதலைப்புலிகளால்...

வில்லை. விடுதலைப் புலிகளின ஆயுதப் போராட்டம் முடிவுற்ற பிறகு இந்நாள் வரை ஈழத்தமிழர்கள் தங்களுக்கான பேரம் பேசும் சக்தியை இழந்து குறைந்த பட்ச அரசியல் உரிமைகள் கூட கிடைக்காமல் தவித்து வருகின்றனர்.

சிங்கள அரசு, தான் செய்த செய்து வருகின்ற குற்றங்களை மறைக்க விடுதலைப் புலிகள் மீது அவதூறு குற்றச்சாட்டுகளை அள்ளி வீசி வருகிறது. இந்திய அரசும், இந்திய ஊடகங்களும் தேவையில்லாமல் விடுதலைப்புலிகள் தமிழகத்தில் இருந்து இயங்குகின்றனர் என்று பொய்யான செய்தியை கூறுகின்றன.

இதனால் விடுதலைப் புலிகள் அமைப்பு இன்று வரை இந்தியாவில் தடை செய்யப்பட்ட இயக்கமாகவே உள்ளது. விடுதலைப் புலிகள மீதான தடையை உடைக்க வேண்டிய பொறுப்பில் உள்ள தமிழக முதல்வரும் இப்போது தனது பங்கிற்கு அவதூறு செய்தியை பரப்புகிறார்.

ஜெயலலிதா நீதிமன்றத்தில் தனக்கு விடுதலைப் புலிகள் மூலமாக அச்சுறுத்தல் உள்ளது என்று கூறுவது விடுதலைப் புலிகளின் அறம் சார்ந்த விடுதலைப் போராட்டத்தை கொசசைப்படுத்துவதாக உள்ளது.

விடுதலைப் புலிகளால் உலகத் தமிழர்களுக்கு பாதுகாப்பே தவிர ஒருநாளும் அச்சுறுத்தல் இல்லை என்பதை தமிழர்கள் நன்கு அறிவார்கள்.

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக சட்டமன்ற தீர்மானங்களை ஜெயலலிதாவின் அரசு நிறைவேற்றிய பிறகு இப்போது ஈழத் தமிழர்களின் பிரதிநிதிகளாக விளங்கும் விடுதலைப் புலிகளால் ஆபத்து என்று ஜெயலலிதா கூறுவது முற்றும் முரணாகவே உள்ளது.

ஆதலால் உண்மைக்கு புறம்பான கருத்தை நீதிமன்றத்தில் தெரிவித்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கு தமிழர்களின் சார்பில் தமிழகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது என குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

## பட்ஜெட்...

யாகக் கொண்ட ஓர் வரவு செலவுத் திட்டமாக இந்த வரவு செலவுத் திட்டம் அமையும் என திறைசேரியின் மூத்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற நலனோம்பு விடயங்களுக்கு குறிப்பிடத்தக்களவு நிதி ஒதுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வேலை வாய்ப்பு, சுயதொழில் முயற்சி, தொழில் பயிற்சி, தொழில்நுட்ப திறன அபிவிருத்தி, மூன்றாம் நிலை கற்கைகளுக்கும் இந்த வரவு செலவுத் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

அதேவேளை, ஜனாதிபதி தேர்தல் விரைவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுவதால் அந்தத் தேர்தலை இலக்கு வைத்து இந்த வரவு செலவுத் திட்டம் அமையும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-11)

## ஐ.நா. முன்...

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளின் 27-வது கூட்டத் தொடர் நடந்து வரும் நிலையில் இப் புரட்சிகர நிகழ்வு முக்கியம் பெறுகின்றது.

இதில் பல மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் பல தமிழ் இன உணர்வாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், தியாக தீபம் திலீபன் மற்றும் போராளிகள், பொது மக்கள், ஈகப் பேரொளிகளுக்கு சுடரேற்றலும், அகவணக்கமும் இடம்பெற்றது.

இப் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வண்ணம் துவிச்சக்கர வண்டிப் பயணம் மேற்கொண்ட மூன்று தமிழ் இன உணர்வாளர்களும் முருகதாசன் திடலை அடைந்துள்ளனர்.

அத்துடன், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் சுப்பிரமணிய சுவாமியின் கொடும்பாவிகளும் ஊர்வலத்தில் இழுத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப் போராட்ட நிகழ்வில் பொலிஸாரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## முதல...

யாத நிலைமை ஏற்பட்டமையை அடுத்தே அவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் முழங்காவில் பகுதியில் சில நிகழ்வுகளில் பங்குபற்றிய முதலமைச்சர் அங்கு சில காணிகளை நடந்து சென்று பார்வையிட்ட சமயம் அவரது காலில் தடி ஒன்று குத்தியதாகவும், அதனால் ஏற்பட்ட புண் வேதனையளித்த நிலையிலேயே அவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார் என்றும் அறிய முடிந்தது. (எ-11)

# மரண அறிவித்தல்

## திருமதி வள்ளிநாயகி தர்மராஜா



இணுவிலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வள்ளிநாயகி தர்மராஜா நேற்று (15.09.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நல்லூர் தர்மராஜா (தர்மண்ணை)வின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான நடராஜா- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான கந்தசாமி - யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், நீபன் (லங்கா அசோக் லைடன்), நர்த்தனன் (மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தையல்நாயகி, செல்வரட்ணம் (கனடா), தெய்வேந்திரம் (கனடா), பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற பரமசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நகுலேஸ்வரி, காலஞ்சென்ற சுகுணராஜா மற்றும் சற்குணேஸ்வரி (சுவிஸ்), பாக்கியராஜா, குகராஜா (லண்டன்), செல்லத்துரை, யோகமணி (கனடா), ஜெயா (கனடா), தனலக்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், பரமலிங்கம், செல்வகாந்தன் (சுவிஸ்), லோகேஸ்வரி, யசோ (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகலியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2014) செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: தர்மராஜா குடும்பத்தினர்.
(தர்மண்ணை நல்லூர்)
(முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர் யாழ். பல்கலைக்கழகம்)

நற்துணை இல்லம்
கிளுவைக் கட்டை ஒழுங்கை,
இணுவில் தெற்கு, இணுவில். (7609)


# தேவை

யாழ்.நகரில் ஸ்ரூடியோ ஒன்றுக்கு
✦ Video Editor (Adobe Premiere)
✦ Photo Designer (Photoshop)
அனுபவமுள்ள இருபாலாரும் நேரில் வரவும். (7607)
309, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0777162339




| | | |
|---|---|---|
| கொழும்பு – டுபாய் | –20000 | O/W |
| கொழும்பு – சென்னை | –22000 | RTN |
| கொழும்பு – திருச்சி | –22400 | RTN |
| கொழும்பு – டோகா | –26000 | O/W |
| கொழும்பு – மலேசியா | –32000 | RTN |
| கொழும்பு – பெங்களூர் | –32200 | RTN |
| கொழும்பு – சிங்கபூர் | –30800 | RTN |
| கொழும்பு – சிட்னி | –58000 | O/W |
| கொழும்பு – மாலைத்தீவு | –32000 | RTN |
| கொழும்பு – மிலான் | –57800 | O/W |
| கொழும்பு – சுவிஸ் | –83500 | RTN |
| கொழும்பு – லண்டன் | –45400 | O/W |
| கொழும்பு – பிரான்ஸ் | –45500 | O/W |
| கொழம்பு – ஜேர்மன் | –71500 | RTN |
| கொழும்பு – நியூசிலாந் | –88700 | O/W |
| கொழும்பு – கனடா | –105700 | O/W |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்
யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்
#128, Brown Road, Jaffna
128.பிறவுண் வீதி யாழ்ப்பாணம்

# பதவி வெற்றிடம்

இதோ எமது Granton Company இல் அடிப்படைத் தகைமையான O/L உடன் இணைந்து பணிபுரிய ஓர் அரியசந்தர்ப்பம்.
யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டத்தினருக்கு முன்னுரிமை வழங்கப்படும்
★ பயிற்சி மற்றும் நிரந்தர தொழில்வாய்ப்பும் வழங்கப்படும்.
★ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். ★ வயதெல்லை 18–30
அழைக்க: 0774458134
இல:-225, 3ம் குறுக்குத்தெரு ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(World Visionக்கு அருகில்) (7608)

# வேலைக்கு ஆள்தேவை

கிளிநொச்சி முதல்தர Hotel ஒன்றுக்கு WESTERN CHINESE, INDIAN, LOCAL சாப்பாட்டு வகைகள் செய்யக்கூடிய சமையல் ஆள் "CHEF" அவசரமாகத் தேவை.
தொடர்பு:
0773366446, 0773824700 (சி-8511)

# கல்வி மற்றும் தொழில்சார் வழிகாட்டற் இலவசக் கருத்தரங்கு



"உயர்தரத்தின் பின்னர் மாணவர்களே நீங்கள் செல்லவேண்டிய பாதை....??"

கொழும்பு மற்றும் கண்டி பிரபல விரிவுரையாளர்களினால் நடாத்தப்படும் இலவசக் கருத்தரங்கு

*Mr.Shamri Ahafurdeen*
*Deputy General Manager - ESOFT / Senior Lecturer*

முன்னெடுக்கப்படும் விடயங்கள்
- சவால் மிக்க துறைகளில் காணப்படும் தொழில் வாய்ப்புக்கள் எவை?
- எமது தகைமைகள், தொழில்த் துறையில் வெற்றி பெற வழி தேடிக் கொள்வது எவ்வாறு?
- உங்கள் எதிர்காலத்திற்கும், பல்கலைக்கழகக் கல்விக்கும் உறுதியானவை எவை? அவற்றை இனங்காண்பது எவ்வாறு?
- நல்ல தொழில் வாய்ப்பைப் பெற மிகக்குறைந்த தகைமைகள் எவை?
- கற்பித்தல் நிலையமொன்றைத் தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டியவை என்ன?

*பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டது
பதிவுகளுக்கு: உங்கள் பெயர், முகவரியை 077 309 9 308 அனுப்பி உறுதிசெய்யுங்கள்
17.09.2014
10.00 am
குறிப்பு: மாணவர்களுடன் பெற்றோர்களும் சமூகமளிக்க முடியும்
ESOFT - Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
No 137, K.K.S Road, Jaffna, Srilanaka
Tel : 021 22 4142 (C-8509)
Sri Lanka's Largest Higher Education Network


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.